
இதழ் 01 செப்டம்பர் 2015 விலை 100 ரூபா

# நாளைய தலைவர்கள்

விதை விருட்சமாகும்


பண்பாட்டெழுச்சிக்கான பரீட்சார்த்தப் பயணம் - மாதமொரு முறை





## இலங்கையில் தனியார்துறை உயர்கல்வியை நெறிப்படுத்தும் முறையான சட்டங்கள் நடைமுறையில் இல்லை!

- பொறியியலாளர் அப்துர் ரஹ்மான்



## அன்பின் உருவத்திற்கு நண்பனின் இரங்குதல்கள்...!

-ரா.ப.அரூஸ்

மர்ஹூம் எம்.உபைதுல்லாஹ் (ஸலபி)

**Thihari Fashion**

- இமிடேசன்
- சோல்
- சாரி
- அபாயா
- சல்வார்
- சிறுவர் ஆடைகள்



Maharoof Nagar, Kinniya -03, Sri Lanka. Tel: 0772356128

# UK Qualifications
## (One Course - Three Certificates)

We are Accredited with : UK CCL

PQMS 5001 : 2005

ISO 9001 REGISTERED FIRM

**Montessori Teacher Training Diploma**
(AMI Certificate+Child Psychology+First Aid)

**International Business Management**
(Management+HR+Marketing+Skil Training,English, etc)

**Couselling & Psychology Diploma**

**Mobile Phone Repairing Course**

SABI University France

City & Guilds Approved Centre

Ntec TERTIARY GROUP NEW ZEALAND

MAHSA UNIVERSITY COLLEGE MALAYSIA

**Spoken English & IELTS / A1 / B1 Courses**

# Amazon College

294, 2nd Floor, People's Bank Building
Galle Road, Colombo-4 (Bambalapitiya)
Tel : 0114-386-126 Hot Line : 0765-204-605
email : amazoncollegesl@gmail.com.
Website : www.amazoncollege.lk

## Study Abroad

UK - USA-Canada- New Zealand - Europe- Singapore-Malaysia & India

**Diploma, Degree and Masters**

Call / SMS : 0765-204-604

# MILLENNIUM CERAMICS



Dealers in Sanitary ware,
Wall Tiles, Floor Tiles,
PVC Pipes & Fittings

Modern Designs
New arrivals
Friendly Customer care



No.99, Main Street,
Kekirawa.
Tel: 0253242971



# நாளைய தலைவர்கள்

விதை விருட்சமாகும்

இதழ் 01 செப்டம்பர் 2015

**Editor in Chief**
R.F.Arooz (MBA - Reading)

**Editor**
Nila

**Editorial Team**
A.K.M.Nasmi (Faculty of Medicine)
M.S.M. Ikrima (Msc., LLB - Reading)
O.L.Samardeen (BA, Dip.in Edu)
A.Sulaiha Begam (SLPS)
Rinos Haniffa (BSW, PDC, PgDPCS)
A.A.M.Sabri (Dip.in.Mass Media)

**Layout designer**
R.F.Munees

**Type setting**
M.C.Minhaj
S.Abdul Haadhi



பொதுசன நூலகம்
04 SEP. 2015
மாநகர சபை
யாழ்ப்பாணம்



**Publishers**
Raapa International Campus



**For Contacts:**
The Editor
"Naalaya Thalaivarhal"
Raapa International Campus
No.93, 1st Floor, Main Road,
Kekirawa, Sri Lanka.

Tel: 0252265323, 0253245327
Hotline: 0774244914
E-mail:futureleaders@raapa.edu.lk


## உள்ளே உள்ள விதைகள்


இலக்கை நோக்கிப் பயணித்தல் 02

படிக்காத காமராஜரிடம் இருந்து நாம் ஏராளமாகப் படிக்கலாம் 05

வடமத்திய மாகாணத்தில் ஆண் - பெண் தனித்தனி முஸ்லிம் பாடசாலைகள் உருவாக்குதல் பற்றிய ஒரு சிந்தனைக் குறிப்பு 06

நேர்முகம் பற்றிய சில பொதுவான கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் 08

போதியளவு வழிகாட்டல்கள் இல்லாத நிலையில் தொழில்நுட்பச் சாதனங்கள் வாழ்நிலையைத் தலைகீழாக்கியிருக்கிறது..! 10

ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் பள்ளி ஆசிரியருக்கு எழுதிய கடிதம் 13

எமக்குத் தேவை: புறத்தொதுக்கும் அனுகுமுறையல்ல, அறவணைக்கும் அனுகுமுறையே! 14

அவனுக்கே அவன் அந்நியமானான் 17

மழலை மாறாத வயதில் மன அழுத்தம்: ஏங்கும் பிஞ்சுக் குழந்தைகள்! 19

என்ன? ஏன்? எதற்கு? 21

படிப்பில் பின்தங்கும் மாணவர்கள் 23

அன்பின் உருவத்திற்கு நண்பனின் இரங்குதல்கள் 24

இலங்கையில் தனியார்துறை உயர்கல்வியை நெறிப்படுத்தும் முறையான சட்டங்கள் நடைமுறையில் இல்லை 26

மானுடத்தின் மாண்பு ஆசான்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது 32


குழந்தை தேசம் 39

கலாமும் கலமும் 44

மாணவர்களின் காத்திரமான படைப்புக்களும்...

# இலக்கை நோக்கிப் பயணித்தல்

ஆசிரியர் தலையங்கம்




மாணவர்களிடம் ஆசான்கள் அடிக்கடி கேட்பதுண்டு, " உனது எதிர்கால இலக்கு என்ன? " என்று.

"நான் வைத்தியராக வேண்டும்"

"நான் எஞ்ஜினியராக வேண்டும்"

"நான் லோயராக வேண்டும்"

என்றவாறு ஒவ்வொருவருடைய ஆசையும் நீண்டு செல்லும்.

அதிலும் ஒரு சில மாணவர்கள், "நான் உங்களைப் போல ஆசானாக வேண்டும்" என்று கேட்போருக்கு ஐஸ் வைக்கும் சமாச்சாரங்களெல்லாம் எப்போதும் நிகழ்வதுண்டு.

மாணவர்களின் பதிலைக் கேட்ட ஆசிரியர்கள் கூறுவது பிரமாதமாக இருக்கும்.

"வெறிகுட். அப்படித்தான், எல்லோரும் நல்லாப்படிச்சி டொக்ராக, எஞ்ஜினியராக வரவேண்டும்"

உண்மையைச் சொல்வதானால் நிகழ்கால உலகின் தேவைக் - கிணங்க இவையெல்லாம் இலக்கு எனும் பதத்தினைப் பூரணப்படுத்தி விடமாட்டாது.

தற்போதைய உலகின் முதற் தேவை "மனிதாபிமானமுள்ள நல்ல மானுடன்" எனும் இலக்கினை எட்டிப்பிடிப்பதே.

இந்த இலக்கிற்கு முன்னால் வைத்தியர், எஞ்ஜினியர் எனும் அந்தஸ்த்துக்களெல்லாம் சின்ன விடயங்களாகும்.

எனவே ஒவ்வொரு மாணவனும் உள்ளத்தில் ஊன்றிப் பதித்துக் கொள்ள வேண்டிய முதல் இலக்கு நல்ல மனிதனாவதொன்றே!

யாவரும் இவ்விலக்கை நோக்கியே பயணிக்க வேண்டும்.
இப்பயணத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமானால் நிறைய விடயத்தில் முழுமைபெற வேண்டும்.

ஒழுக்கப் பயிற்சி செய்து தேர்ச்சி அடைய வேண்டும்.
அறிவின் விசாலத்திற்கு அரும்பாடுபட வேண்டும்.
சிந்தனா சக்தியைச் சீர்படுத்த வேண்டும்.
யாவருக்கும் உதவுமாறு உள்ளத்தை உயர்த்த வேண்டும்.
பொருளாதார ஸ்த்திரத்திற்காய் ஓயாது உழைக்க வேண்டும்.
பிறரின் சந்தோசத்திற்காய் சங்கடங்கள் தாங்க வேண்டும்.
பிறர்படும் துக்கத்தில் பாதியை வாங்க வேண்டும்.

இவையனைத்தையும் தொட்டுவிட்டால் நல்ல மானுடன் எனும் இலக்கை எட்டிவிடலாம்.

மாணாக்கர் யாவரும் இவற்றுக்கான திட்டமிடலை கட்டங்கட்டமாக மேற்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடப் புத்தகங்களுக்குள் மாத்திரம் புதைந்து விடாமல் மாணவப் பருவத்திலேயே மாண்புகள் தொட மனங்கொள்ள வேண்டும்.


பூ மலர்ந்த பின்பே மணம் வீசும். இங்கோ மாணவப் பருவம் நன்றாய் மணம் வீசிய பின்பே "நல்ல மானுடம்" எனும் பூ பூக்கும்.

மானுடத்தின் மலர்ச்சிக்காய் மாணவப்பருவத்தினர் அதிகம் முயற்சிக்க வேண்டும்.

இளம் வயதிலிருந்து உள்ளங்கழுவ முயன்றாலொழிய உடலளவில் மனிதனாய் உயர்ந்து விட்ட பின்பு உள்ளத்தை உயர்த்த எந்த உளவியல் கருத்தரங்குகளும் உதவாது. ஏனெனில் துருப்பிடித்த சிந்தனைகளை இவ்வாறான எந்த ஏற்பாடுகளும் அவ்வளவு சீக்கிரம் சீர்செய்திட மாட்டாது.

பொதுசன நூலகம்

பட்டம், பதவிகளில் பல்லாயிரம் பேர் மோகங்கொண்டு வெற்றியும் கண்டுள்ளனர். ஆனால் இன்னும் மானுடம் மட்டும் பட்டுப்போன நிலையிலேதான் இருக்கின்றது. இதனால் நிகழ்காலமும் நிம்மதியிழந்தே கிடக்கின்றது.



இந்நிலைக்குத் தலையாய காரணம் இளையோர் யாவரும் மனப்பாடம் செய்கின்றனர். ஆனால் மனிதாபிமானம் கற்பதில்லை.

இந்நிலை மாறவேண்டும்.

நல்ல மனிதனொருவன்
வைத்தியனாக வேண்டும்.
நல்ல மனிதனொருவன்
என்ஜினியராக வேண்டும்.
நல்ல மனிதனொருவன்
சட்டத்தரணியாக வேண்டும்.
நல்ல மனிதனொருவன்
அதிகாரியாக வேண்டும்.
நல்ல மனிதனொருவன் உயர்
பிஸ்னஸ்மேனாக வேண்டும்.

இப்படியாகவே மாணாக்கர் தம் இலக்கினை வரையறை செய்ய வேண்டும். எந்தத் துறையில் சாதிக்க முடிந்தாலும் அதன் பெயருக்கு முன்னால் "நல்ல மனிதன்" எனும் வார்த்தை அடைமொழியாய்க் கிடக்க வேண்டும்.

இந்த அடைமொழியற்ற பட்டமோ, பதவியோ, அந்தஸ்த்தோ எத்துணை பெரியதாயினும் இலக்கினை அடைந்து கொள்ளல் எனும் வாசகத்தினை பூரணப்படுத்திவிடாது.

ஏனெனில், அப்படியானால் இந்த உலகில் ஏராளமானோர் இலக்கினை அடைந்துள்ளார்கள் என்று கொள்ள வேண்டும். அவர்களால் இந்நேரமெல்லாம் மானுடம் காக்கப்பட்டிருக்க வேண்டும்.
மானுடம் முழுக்க தூய்மை நிரம்பி வழிந்திருக்க வேண்டும். பொல்லாப்புக்கள் அத்தனையும் பொசுங்கியிருக்க வேண்டும்.

ஆனால் இங்கோ மனிதாபிமானம் பொசுங்கும் வாசனையினையே ஆங்காங்கே அடிக்கடி முகர முடிகிறது.

இதுவரையும் நான் சொல்லி வந்தவைகள் அனைத்தும் மாணாக்கரும் கட்டாயம் எட்டவேண்டிய பொதுவான அடிப்படை இலக்குகளாகும்.

இது தவிர, தமது சிந்தனா விசாலம், அறிவின் விரிந்துபட்ட தன்மை, ஆளுமையின் அகலம், இயலுமை, ஆசை என்பவற்றுக்கிணங்க ஒவ்வொருவருடைய இலக்கும் மேற்படி அடிப்படை இலக்குடன் சேர்ந்து துறைசார் விடயத்திலும் இன்னும் உயர்ந்து நிற்க வேண்டும்.


அதாவது வழமையான வரிசையை விட்டுத்தாண்டி தனித்துவமான உச்ச முயற்சியில் இரங்க வேண்டும்.
சாதனையாளனாய் உயர்ந்து நிற்க முழுமூச்சாய் முயற்சிக்க வேண்டும். ஏனெனில் அவ்வாறான Extra ordinary நபர்களினால்த்தான் இந்த உலகின் சமநிலை பேணப்படுகிறது.


எனவே இத்தகைய மாணவர்கள் தமக்குள்ளேயே ஒரு சாதனை வேட்கை கொண்டு வேகத்துடன் தொழிற்பட வேண்டும். இவ்வுலகில் ஏதாவதொன்றைப் புதிதாய்ப் புரிந்து காட்ட வேண்டுமென்றும், அது உலகப் புனர் நிர்மானத்திற்கு வழி செய்ய வேண்டுமென்றும் தீவிர வேட்கை கொள்ள வேண்டும்.


ஒவ்வொருவரினுள்ளும் இறைவன் வித்தியாசமான, அவர்களுக்கே உரித்தான உயர் ரக ஆற்றல்களைப் புதைத்து வைத்திருக்கிறான். அவற்றைத் தோண்டியெடுத்துப் பட்டை தீட்ட வேண்டும்.
அதாவது தன்னுள் இருக்கும் ஆற்றலும், தனக்கான துறையும் எதுவென சரியாய் இனங்கண்டு கொள்வதே பாரியதொரு சாதனைதான்.

அவற்றினை இனங்கண்டதன் பிற்பாடு அத்துறையில் சிகரம் தொட முயற்சிக்க வேண்டும். தன்னையும் தனது ஆற்றலையும் அறிந்து செய்யும் முழுமன முயற்சி ஒருபோதும் முக்கியத்துவமிழந்து போவதில்லை. இவ்வாறான முயற்சியில் மூழ்குபவனுக்கு சாதனை முத்துக்கள் சாதாரணமாய்க் கிடைத்துவிடுகின்றன. ||

38வது வயதில் கிரிக்கட்டில் இருந்து ஓய்வுபெறும் சங்ககராவிற்காக எவ்வளவோ வருந்தும் எம் இளைஞர்கள் 68 வயதாகியும் ஓய்வுபெறாத தம் தந்தையைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதேயில்லையே...!







# படிக்காத காமராஜரிடம் இருந்து நாம் ஏராளமாகப் படிக்கலாம்

காமராசர் (காமராஜர்) தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர்களுள் ஒருவர் ஆவார். 1954 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநில முதலமைச்சர் ஆனார். இவர் 9 ஆண்டுகள் தமிழகத்தின் முதல்வராக பதவி வகித்தார். தமிழகத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். காமராசு எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். இவர், தென்னாட்டு காந்தி, படிக்காத மேதை, அரசரை உருவாக்குபவர் (King Maker), பெருந்தலைவர் என்றெல்லாம் புகழப்படுகிறார். இவர் "கருப்பு காந்தி" என்று அன்போடு அழைக்கப்பட்டார். இவர் இறந்த பிறகு 1976 இல் இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. சென்னை வானூர்தி நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தன்னைப் பாராட்டி யாராவது அதிகம் பேசினால், "கொஞ்சம் நிறுத்துன்னேன்" என்று சட்டையைப் பிடித்து இழுப்பார். அடுத்த கட்சியை மோசமாகப் பேசினால், "அதுக்கா இந்தக் கூட்டம்னேன்" என்றும் தடுப்பார்!

சுற்றுப் பயணத்தின்போது தொண்டர்கள் அன்பளிப்பு கொடுத்தால், "கஷ்டப்படுற தியாகிக்குக் கொடுங்க" என்று வாங்க மறுப்பார்!

மகன் முதலமைச்சரானதும் அம்மா சிவகாமிக்கு அவருடன் தங்க ஆசை. "நீ இங்க வந்துட்டா உன்னைப் பார்க்கச் சொந்தக்காரங்க வருவாங்க. அவங்களோட கெட்ட பேரும் சேர்ந்து வந்துடும். அதுனால விருது நகர்லயே இரு" என்று சொல்லிவிட்டார். அந்த வீட்டையாவது பெரிதாக்கி கட்டித் தரக் கேட்டபோதும் மறுத்துவிட்டார்!

பந்தாக்களை வெறுத்தவர். முதல் தடவை சைரன் ஒலியுடன் அவருக்கான பாதுகாப்பு கார் புறப்பட்டபோது தடுத்தார். "நான் உயிரோடுதான இருக்கேன். அதுக்குள்ள ஏன் சங்கு ஊதுறீங்க? " என்று கமெண்ட் அடித்தார்!

இரண்டு முறை பிரதமர் ஆக வாய்ப்பு வந்தபோதும் அதை நிராகரித்து லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரை பிரதமர் ஆக்கினார். "கிங் மேக்கர்" என்ற பட்டத்தை மட்டும் தன்னோடு தக்க வைத்துக்கொண்டார்!

## காமராஜர் பற்றி பிறர்....!

**நேரு** - "திறமை, நல்லாட்சி, இவைகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் ஓர் அரசாங்கத்திற்குத் தலைவர் என்ற முறையில் காமராசர் சென்னை முதல் அமைச்சராக இருக்கிறார். மக்களுக்கு மேலும் மேலும் தொண்டுபுரிய அவர் நீண்ட காலம் வாழ்வார் என நான் நம்புகிறேன்"

**பெரியார்** - "சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஏற்படாத மறுமலர்ச்சியும் விழிப்பும் இப்போது ஏற்பட்டுள்ளன. இதற்கு காரணம் நமது காமராசர்தான். ஊர்தோறும் சாரம் தொழில்வளம் ஏற்பட்டுள்ளன. மூவேந்தர் காலத்தில்கூட நிகழாத இந்த அதிசயத்தை சாதித்த நமது காமராசரின் அறிவுத்திறனை மறுக்க முடியுமா? "

**இந்திரா காந்தி** - "காமராசு தோற்றத்தில் மட்டுமின்றி மதிநுட்பத்திலும் மக்களையும், அவர்களுடைய பிரச்சினைகளையும் புரிந்து கொள்வதிலும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் நாட்டம் மிகுந்த தலைவராக விளங்குகிறார்"

**கருணாநிதி** - "தியாகச் சுடர், தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றவர்."

II II II

### வடமத்திய மாகாணத்தில்

# ஆண் - பெண் தனித்தனி முஸ்லிம் பாடசாலைகள்

## உருவாக்குதல் பற்றிய ஒரு சிந்தனைக் குறிப்பு

கல்வியின் முக்கியத்துவம் பற்றியோ வாழ்வியலுக்கு அதன் அவசியம் பற்றியோ சொல்லித்தான் தெரியவேண்டும் என்கின்ற நிலை இன்று எம்மவரில் நிறையப் பேருக்குக் கிடையாது. ஏனெனில் கல்வி ஆண் - பெண் இருபாலார் மீதும் கட்டாயக் கடமை,என்று அகிலத்தாருக்கான மார்க்கமான இஸ்லாம் எமக்குக் கற்றுத் தந்திருக்கிறது. ஆனால் அந்தக் கல்வியை பெற்றுக்கொள்கின்ற, கற்றுக்கொள்கின்ற வழிமுறைகள் மற்றும் அதன் பிரயோகங்கள் பற்றித்தான் இன்று ஏராளமான கருத்து முரண்பாடுகளும் வாதப் பிரதிவாதங்களும் எம்மிடையே நிலவுகின்றன.

இவ்வுலகில் ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லாப் பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வு கிடைத்துவிடுவதில்லை. அதற்காக, தீர்வு குறித்த முயற்சிகளையும் முன்னெடுப்புக்களையும் விட்டுவிடுவதோ அல்லது முயற்சியேயின்றி இருப்பதோ மனித குலத்திற்கு அழகன்று. அவ்வாறான, இதுவரையும் தீர்வு கிடைக்கப் பெறாத ஒரு பிரச்சினை பற்றியே இங்கு எழுத விளைகிறேன்.

ஆண் - பெண் இருபாலார் மீதும் கல்வி கட்டாயக் கடமை என்று வழிகாட்டும் எமது இஸ்லாம் ஆண்-பெண் கலப்புப் பற்றியும் மிகத் தெளிவான வழிகாட்டல்களை எமக்குத் தந்துள்ளது என்றால் அதற்கு மாற்றுக்கருத்திருக்க முடியாது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் இது ஒரு பல்லின தேசம் என்பதாலும் அதில் முஸ்லிம்களாகிய நாம் சிறுபான்மையாக வாழ்பவர்கள் என்பதாலும் சில விடயங்களை நிதானித்து அணுகவேண்டியதென்னவோ உண்மைதான். ஆனால் அதற்காக சாத்தியமான, சாதிக்கவல்ல சில விடயங்கள் குறித்தும் சிந்திக்காது பராமுகமாக இருந்துவிடுதல் ஆரோக்கியமானதொன்றல்ல எனும் தகவலை முதலில் முன்மொழிந்து, சொல்ல வந்த விடயத்தை ஆரம்பிக்கிறேன்.

பாடசாலைகள் - கல்விக் கல்லூரிகள் - பல்கலைக் கழகங்கள் போன்ற தளங்களில் இலவசக் கல்வி அரங்கேறுகின்றன. இங்கு நான் பாடசாலை எனும் தளம் குறித்தே பேச விளைகிறேன்.

எமது வடமத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் மொத்தமாக 802 அரச பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் 709 சிங்கள மொழி மூலப் பாடசாலைகளும் 93 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளும் அடங்கும். இதில் எமது முஸ்லிம் மாணவர்களைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலேயே அதிகமானோர் கல்வி கற்கின்றனர். ஆனால் இவையனைத்தும் ஆண் - பெண் மாணவர்கள் கலந்து கற்கின்ற கலவன் பாடசாலைகளாகவே காணப்படுகின்றன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கு பெரும்பாலான பாடசாலைகள் ஆண்கள் பாடசாலைகள் - பெண்கள் பாடசாலைகள் என தனித்தனியாகவே இயங்குகின்றன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் சிறுபான்மையாக வாழ்ந்தாலும் யாவரும் ஒரே இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டியவர்களேயன்றி வேறில்லை.

ஆனால் துரதிஸ்டவசமாக வடமத்திய மாகாணத்தில் இதுவரையிலும் ஒரு பாடசாலை கூட ஆண்-பெண் கலவன் அல்லாத முஸ்லிம் பாடசாலை அமைக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆண் - பெண் கலந்து கற்பதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி அவ்வளவு விரிவாக நாம் விவாதிக்க வேண்டிய தேவை இருக்காது என நினைக்கிறேன். ஏனெனில் அது குறித்த இஸ்லாமிய வழிகாட்டல்களையும், இன்றைய நடைமுறைசார் பிரச்சினைகளையும் நாம் நாளாந்தம் பார்த்துக்கொண்டும் அனுபவித்துக்கொண்டுமே இருக்கிறோம்.

ஆண் - பெண் கலவன் என்கின்ற இந்த நிலைமையானது ஏராளமான குர்ஆன்,




ரா.ப.அரூஸ்

*The writer, R.F. Arooz is a Media Consultant and recognized Journalist of Information Department of Srilanka. He has published several books and he is interested in researches of better humanity.*

சுன்னா வழிகாட்டல்களிலிருந்து எம்மை விலகச் செய்துவிடக் கூடிய ஒரு அபாயகரமான விடயமாகவே காணப்படுகிறது. வேலைத்தளம், போக்குவரத்து என எல்லாத் தளங்களிலும் இன்று இதுசார் பிரச்சினைகள் அரங்கேறியவண்ணமே இருக்கின்றன. அதிலும் சுமார் 6 மணித்தியாலங்களாக இயங்குகின்ற பாடசாலை எனும் தளத்தில் இத்தகைய நிலைமை காணப்படுவது ஆபத்தானதொரு விடயமேயாகும்.

அதிலும் மாணவப் பருவமென்பது மிகவும் பக்குவத்துடன் வழிகாட்டப் படவேண்டிய ஒரு காலகட்டம் என்றால் அது மிகையாகாது. இவ்விடயத்தில் மாணவர்களை முற்றுமுழுதாக அதிபர் - ஆசான்கள் கண்காணித்தல் என்பதும் மிகவும் சிரமமான விடயமேயாகும். எனவே இந்தக் கலவன் முறையானது பல்வேறு கலாசாரச் சீரழிவுகளுக்கும் பிழையான பழக்கங்களுக்குமே வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஏனெனில் அல்குர்ஆனிய மற்றும் சுன்னாவின் வழிகாட்டல்கள் மீறப்படுகின்ற இடங்களிலெல்லாம் பிரச்சினைகள் உருவெடுக்கும் என்பதில் நாம் யாருக்கும் மாற்றுக்கருத்திருக்க சாத்தியமில்லை.

ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் ஒரு அன்னிய மேற்பார்வையின் கீழும், அன்னிய மதச் சகோதரர்களின் வழிகாட்டலின் கீழுமே (வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம்) எமது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதனால் அவ்வளவு விரைவில் நாம் ஆண்-பெண் தனித்தனிப் பாடசாலைகளை உருவாக்கிவிடுதல் என்பது நடைமுறைச் சாத்தியமில்லாத விடயம்தான். ஆனால் அதற்கான திட்டமிட்ட முறையான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியது இஸ்லாமியர்களாகிய எம்மனைவர் மீதுமுள்ள கட்டாயக் கடமையேயாகும். கிழக்கு மாகாணத்தில் தனித்தனிப் பாடசாலைகள் அமைக்க முடிந்திருக்கும் போது நாம் மாத்திரம் ஏன் இது குறித்து சிந்திக்காமல் இருக்கவேண்டும்...?

இந்த நாட்டில் எமக்குக் கிடைத்திருக்கும் சமயம்சார் உரிமைகளனைத்தும் தாமாகவே கிடைத்தவையல்ல. அவை எமது முன்னோர்களின் திட்டமிட்ட செயன்முறைகள் மற்றும் அணுகுமுறைகளின் மூலம் கிடைத்தமையேயாகும். எனவே இவ்விடயத்தில் நாமும் அவ்வாறான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். எமது சமய வழிகாட்டல்களைச் சரியாகப் பின்பற்றுவதற்காக நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிகளும் இபாதத்களேயாகும். அதற்கான சகல உரிமையும் எமக்கிருக்கிறது.

போட்டோ பிடிப்பது ஹராமா? ஹலாலா? என்றும், பெண்கள் முகத்தை மறைக்க வேண்டுமா? வேண்டாமா? என்றும் விவாதிக்கும் நாம் ஆண் - பெண் கலவன் பற்றிய எந்தவொரு சிந்தனையோ முன்னெடுப்புக்களுமோ இன்றி இருத்தல் சரியானதா...?

**தராவீஹ் போன்ற தொழுகைகளின் போது பள்ளிவாயல்களினுள் திரை போடும் நாம் பாடசாலைகளில் சுமார் 6 மணித்தியாலயங்களாக எமது பிள்ளைகளைக் கலவனாக அனுமதித்திருக்கிறோமே... இதுபற்றி எப்போது சிந்திப்பது...?**

எனவே எமது உலமாக்கள், கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், சமூகப்பணி புரியும் அமைப்புக்கள் என யாவருமாய் ஒன்றிணைந்து ஆண் - பெண் தனித்தனி முஸ்லிம் பாடசாலைகள் அமைப்பது குறித்து சில திட்டமிட்ட முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டும். இதை நேர்மையான முறையில், ஒழுங்குபடுத்தப்பட்ட அணுகுமுறையூடாக எமது அரசியல் தலைவர்களுக்கு எத்தி வைக்க வேண்டும். அழுத்தம் கொடுக்கவேண்டும்.

ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அருகருகே உள்ள இரு பாடசாலைகளுக் கிடையிலான பரஸ்பர உடன்பாட்டுடன் ஆண் - பெண் தனித்தனிப் பாடசாலைகளுக்கான பரீட்சார்த்த முயற்சியை மேற்கொள்ளலாம். உதாரணமாக கனேவல்பொல முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் பமுனுகம முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பவற்றுக்கிடையிலான தூரம் சுமார் 5 கிலோமீற்றர்களேயாகும். எனவே இவ்விரு பாடசாலைகளும் பரஸ்பர உடன்பாட்டுடன் இவற்றில் ஒரு பாடசாலையை ஆண்களுக்கான பாடசாலையாகவும் மற்றப் பாடசாலையைப் பெண்களுக்கான பாடசாலையாகவும் பிரகடணப்படுத்துவது குறித்து சிந்திக்கலாம். இப்படித்தான் செய்யவேண்டும் என்று நான் சொல்லவில்லை, ஒரு ஆலோசனைக் குறிப்பாக இவ்வுதாரணத்தை முன்வைக்கிறேன்.

இவ்விடயத்தில் ஏராளமான நடைமுறைப்பிரச்சினை, நிருவாகப் பிரச்சினை மற்றும் அரசியல் பிரச்சினைகள் எழலாம். ஆனால் எமது சமூகத்தின் நன்மைகளையும் எமது மார்க்கத்தையும் கருத்திற்கொண்டு இது குறித்து சிந்திக்கலாம். ஏனெனில் உலகில் தோன்றிய ஆக்கபூர்வமான எல்லா மாற்றங்களுக்கும் தடைகளும் எதிர்ப்புக்களும் இருந்தே வந்திருக்கின்றன என்பதை வரலாறு நெடுகிலும் நாம் கண்டுகொள்ளலாம். எனவே எமது பிரதேசத்தில் ஆண் - பெண் தனித்தனிப் பாடசாலைகளை உருவாக்குதல் எனும் நல்ல நிய்யத்துடன் தொழிற்படுவோம், வெற்றி பெறுவோம், இன்ஸா அல்லாஹ்!

|| || ||



# நேர்முகம் பற்றிய சில பொதுவான கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும்

சோம. வள்ளியப்பன்

**01. கேள்விகளுக்கு அளவான பதிலா? விரிவான பதில் சொல்வதா?**

நேர்முகத்தின் தொடக்கக் கட்டத்தில் அளவான பதில்களே சரி. அவர்கள் கேட்கக் கேட்க மேல்விபரம் சொல்லலாம். பின்னரும் கூட தேவையான அளவு பதில்களே பாதுகாப்பானவை.

**02. சில கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை, அல்லது பதில் தவறாகிவிட்டால் தேர்வு செய்ய மாட்டார்களா?**

அவை வேலைகளுக்கு எவ்வளவு அவசியமான தகவல் அல்லது விவரம் என்பதைப் பொறுத்தது. மிகவும் அடிப்படையானவற்றுக்கு தவறாகப் பதில் சொன்னால் அது தேர்வாவதை பாதிக்கவே செய்யும்.

மற்றப்படி அவர்கள் கேட்கக்கூடிய பத்து பதினைந்து கேள்வி-களில் ஒன்றிரண்டுக்குத் தவறாக பதில் சொன்னால் அதனால், நேர்முகத்தின் முடிவு ஒன்றும் மாறிவிடாது. பயப்படத்தேவை-யில்லை.

**03. கைகள் வேர்த்து விடுகின்றன. என்ன செய்யலாம்?**

மனதில் நேர்முகம் பற்றிய பதற்றம் இல்லாமல் இருப்பதற்கு பயிற்சி செய்யலாம். "மாக் இண்டர்வியூ" பல செய்து பார்க்க, பயம் விலகும்.

எல்லோருக்கும் வேர்ப்பதில்லை. சிலருடைய உடல்வாகு அப்படி. அதற்கு மருத்துவர்களைப் பார்க்கலாம். ஹோமியோ பதியில்கூட அதற்கு மருந்து உண்டு. நல்ல கர்ச்சீப் வைத்துக் கொள்ளலாம்.

**04. நேர்முகம் என்றாலே பயம் வருகிறதே...?**

மருந்தைக் குடிக்கும்போது குரங்கை நினைக்காதே என்பார்-கள். இண்டர்வியூ என்பது நமக்குத் தெரியாத பலவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகிற ஒரு இடம் என்று நினைக்க வேண்டாம். தாங்கள் சென்ற எல்லா நேர்முகங்களிலும் ஜெயித்தவர்கள் கிடையாது. அது ஒரு ரிஜெக்ஷன் பிராசஸ் என்பதை விட, அது ஒரு செலக்ஷன் பிராசஸ் என்பதே உண்மை.

நம்மிடமிருக்கும் வளங்களை, திறன்களைத் தெரிந்து கொள்வதற்காகவே நேர்முகம் செய்பவர்கள் முயற்சி செய்வார்கள். அதற்கு நாம் முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

"இந்த வேலை கிடைத்தால் நல்லது. கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் நான் எனக்குத் தெரிந்தவற்றை சரியாக வெளிப்படுத்துவேன்" என்கிற மனோபாவத்துடன் உள்ளே போனால் போதும். பயம் பறந்துவிடும்.

**05. டீ, காபி கொடுத்தால் குடிக்கலாமா?**

நமது நோக்கம் நேர்முகம். நேர்முகம் நடக்கும் நேரம், நிறுவன அதிகாரிகளுக்குக் கொடுக்கும் போது நமக்கும் வேண்டுமா என்று கேட்பார்கள். குடிப்பதால் ஒன்றும் தவறில்லை. ஆனால் அதன் மூலம் நாம் எப்படிப் பருகுகிறோம், கோப்பையை எப்படி எடுக்கிறோம், எப்படி வைக்கிறோம் என்பதையெல்லாம் அவர்கள் கவனிக்கலாம். இந்தப் பிரச்சினைகள் எதுவும் தேவையில்லை என்றால் அவற்றை மறுத்துவிடுவது நல்லது.

**06. எங்கே யாரிடம் வேலை பார்க்கிறேன் என்று முழு விபரம் சொல்லலாமா?**

சில நிறுவனங்களில், கட்டாயப்படுத்திக் கேட்டால் தவிர, மிகத் துல்லியமாக சொல்லவேண்டாம். அந்தச் சில நிறுவனங்கள்– மிகச் சிறிய நிறுவனங்கள், தனிநபர் முதலாளிகள் இருக்கிற நிறுவனங்கள். காரணம், அவர்கள் நம்முடைய தற்போதைய முதலாளியைத் தொடர்புகொண்டு நம்முடைய நன்னடத்தை, வேலைத்திறன் போன்றவற்றை விசாரிக்கத் தொடங்கினாலும் தொடங்கலாம்.

ஆனால் அப்படிச் செய்யும் நிறுவனங்கள் மிகச் சிலவே. பெரும்பாலான நிறுவனங்கள் நாம் எங்கே வேலை செய்கிறோம் என்று தெரிந்துகொள்ளாமல் நம்மை வேலைக்கு எடுக்கமாட்டார்கள். அதனால் நிறுவனம் பற்றிச் சொல்லலாம். சொல்லிவிட்டு, "என்னைப் பற்றி அவர்களிடம் விசாரிப்பதென்றால், என்னைத் தேர்வு செய்தவுடன், வேலைக்கு எடுக்கிறபட்சத்தில் மட்டும் விசாரியுங்கள்" என்று கேட்டுக் கொள்ளலாம்.

**07. கேள்வி புரியாவிட்டால் என்ன செய்வது? மீண்டும் கேட்டால் தவறாக எடுத்துக்கொள்வார்களோ!**

கேள்வியை கவனமாகத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். ஓரிருமுறை Pardon me என்றோ, "எக்ஸ்கியூஸ் மீ" என்றோ சொல்லி, மீண்டும் கேட்கலாம். அடுத்தடுத்த கேள்விகளையும் சரியாகக் கேட்டுக்கொள்ளாமல் அதையே அடிக்கடி செய்தால் நேர்முகம் செய்பவர்களுக்கு எரிச்சல் வரலாம். தவிர, அது தொடர்ந்து கேள்விகள் கேட்கிற ஆர்வத்தினையும் அவர் – களிடம் குறைத்துவிடலாம்.

கேள்வி புரியாவிட்டால் கட்டாயம் என்ன என்று கேட்டுப்புரிந்து கொண்டுதான் பதில் சொல்லவேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஊகங்களுக்கு இங்கே இடமில்லை.

**08. நேர்முகத்தில் நாமாகத் தொடங்கி சொல்ல வேண்டுமா?**

அவர்கள் கேள்விகள் கேட்க ஆரம்பிக்கும் வரை காத்திருக்க வேண்டும். புன்னகையுடன், "ம்... கேளுங்கள்" என்கிற முகபாவத்துடன் காத்திருப்பதே சரி.

**09. ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வராதே!**

பரவாயில்லை. சில கேள்விகளுக்குத்தான், வேலையிடத்தில் ஆங்கிலத்தில் தொடர்ந்து பேசவேண்டிய அவசியம் இருக்கும். எல்லா வேலைகளுக்கும் அது தேவைப்படாது. அதையே நினைத்துக் கொண்டு தனக்குத் தெரிந்ததைச் சொல்லாமல் இருக்கவேண்டாம்.

தொடக்கத்தில் சில கேள்விகளுக்கு தெரிந்த அளவில் ஆங்கிலத்தில் பதில் சொல்லிவிட்டு, பின், இயல்பாகத் தமிழில் பேசத் தொடங்கிவிடலாம். அதை அவர்கள் ஒருகால் விரும்பாவிட்டால், "இதற்கு மட்டும் நான் தமிழில் சொல்லலாமா?" என்று கேட்டுக்கொண்டு பதிலைத் தமிழில் சொல்லலாம். எப்படியும் நாம் சொல்லவேண்டியதைச் சொல்லி விடுவது முக்கியம். மொழி இரண்டாம் பட்சம்தான்.

**10. எதையாவது சொல்லி, அதனைச் செய்யமுடியுமா என்று கேட்டால் என்ன சொல்லுவது?**

அது, எதைச் சொல்லுகிறார்கள் என்பதைப் பொறுத்தது. எதையாவது முட்டாள்த்தனமாகச் செய்யச் சொன்னால், அதன் வேறுபாடு புரியாமல் செய்ய எத்தனிப்பவர்களா நாம் என்று அவர்கள் நம்மைச் சோதிக்கலாம். மற்றப்படி செய்யக் கூடிய எதையும் தைரியமாக செய்கிறேன் என்று சொல்வதுதான் நல்ல மதிப்பை உருவாக்கும். ஆனால் அதையே தொடர்ந்து வேலையில் செய்யவேண்டி இருக்கும் பட்சத்தில் கவனமாக வாக்குக் கொடுப்பது நல்லது.

**11. என் உருவ அமைப்பு சரியில்லை. முக அமைப்பில் குறை, என்ன ஆகும்?**

நேர்முக அறைக்கு உள்ளே நுழைந்த ஒரு சிலவினாடி – களுக்குத்தான் நம்முடைய உருவம் பேசும். அதன்பிறகு நம் திறன்கள்தான் அவர்கள் கண்ணுக்குத் தெரிய வேண்டும். அப்படியிருக்க வேண்டும் நமது பேச்சு.

நம்முடைய பேச்சால், கருத்துகளால் எவரையும் கவரமுடியும். ஆக, இது ஒரு பிரச்சினை அல்ல.

(தொடரும்...)

# கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் திருமதி சுலைஹா பேகம் அவர்களுடனான நேர்காணல்



## போதியளவு வழிகாட்டல்கள் இல்லாத நிலையில் தொழில்நுட்பச் சாதனங்கள் வாழ்நிலையைத் தலைகீழாக்கியிருக்கிறது..!

**கே: உங்களது பாடசாலை பற்றியும் அதில் உங்கள் அனுபவங்கள் பற்றியும் கொஞ்சம் பகிர்ந்துகொள்ளுங்களேன்...**

ஆரம்பத்தில் தமிழ் மொழிப் பாடசாலையாக கெகிராவ பிரதேச எல்லைக்குள் திகழ்ந்தது பெப்டிஸ்ட் மிஷன் தமிழ்ப் பாடசாலை மட்டுமேயாகும். தமிழ், முஸ்லிம் பிள்ளைகள் இங்கு கற்று வந்தார்கள். இஸ்லாமிய கலாசாரம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருவதை கண்ணுற்ற முஸ்லிம் ஆசிரியர்கள் முஸ்லிம் மாணவர்களுக்கான தனிப்பட்ட பாடசாலை ஒன்றை உருவாக்க முயன்றார்கள். 1964.07.10 இல் மூன்று ஆசிரியர்களுடனும் எழுபத்து மூன்று மாணவர்களுடனும் கெக்கிராவ பள்ளிவாசல் நிருவாகத்திற்குட்பட்ட கட்டிடத்தில் இப்பாடசாலை இயங்கத் தொடங்கியது. இதுவே கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் தோற்றுவாய் ஆகும். இப்பாடசாலையை 1965.08.02 இல் அரசாங்கம் பொறுப்பேற்று உதவியாசிரியர்களின் தலைமையில் நடாத்தி வந்தது. 1965.09.15 இல் பயிற்றப்பட்ட முதலாம் தர ஆசிரியராகிய திரு ஏ.எம் ஹனிபா இப்பாடசாலையைப் பொறுப்பேற்று அர்ப்பண சிந்தையுடனும், அயராத முயற்சியுடனும் திறம்பட நடாத்தி வந்தார்.

ஆரம்பத்திலேயே உயரதிகாரிகளின் நன்மதிப்பையும், பாராட்டையும் இப்பாடசாலை பெற்றுக்கொண்டது. இவருக்கு சில மாதங்களின் பின்னர் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய திரு. மொஹிதீன் ஆரம்ப காலங்களில் விடுமுறை கூட எடுக்காமல், மாலை நேரங்களில் பெற்றோர்களுடன் கலந்து பேசி பாடசாலைக்கு மாணவர்களை வரச்செய்து பெரும் தொண்டாற்றினார். இலக்கிய உணர்வும், அறிவு வேட்கையும் மிக்க இந்நிருவாகியின் தலைமையில் இப்பாடசாலை பிரகாசமான ஆரம்பத்தைக் காட்டியது. 1970 இல் ஜீ.சீ.ஈ சாதாரண தர வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டன. 1975 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். எனவே 1976.11.03 இல் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. கெக்கிராவ நகரைச் சூழவுள்ள ஒன்பது கிராமங்களிலிருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்று, உயர்தர பரீட்சைக்குத் தோற்றினார்கள். 1976 இல் பாடசாலைக்கென சொந்தக் காணி சுவீகாரம் செய்யப்பட்டது.

இன்று அறுநூறு மாணவர்களுடனும், நாற்பது ஆசிரியர்களுடனும் வெற்றி நடைபோட்டு முன்னேறி வரும் இப்பாடசாலையிலிருந்து கலை, வர்த்தகப் பிரிவுகளில் வருடந்தோறும் மாணவ மாணவிகள் பல்கலைக்கழகம் சென்று மேற்படிப்பைத் தொடர்கின்றனர். கல்விக் கல்லூரிகளுக்கும் தெரிவாகி வருகின்றனர். பரீட்சைகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வருகிறார்கள்.

தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக அனுமதிவரை இங்கே கற்ற நான் பின்னாளில் என் பாடசாலைக்கே அதிபராக வருவேன் என்று நினைத்திருக்கவில்லை. மகிழ்ச்சிதான் என்றாலும் பொறுப்பின் சுமை தோள்களில் ரொம்பப் பாரமாய் அழுத்துகிறது. 2014 ஜனவரியில் இங்கே பள்ளித்தலைமைப் பொறுப்பை ஏற்றேன். கிராமப்புற பாடசாலைகளில் உதவியதிபராக, மற்றும் அதிபராக பத்து வருஷங்களுக்கு மேலாய்ப் பணியாற்றியிருக்கிறேன். அவற்றையெல்லாம்விட இங்குள்ள அனுபவங்கள் வித்தியாசமானவை. ஒரு அழகான சின்னக் குடும்பத்தைக் கட்டிக்காப்பதுபோல அன்பு வழிநின்று அவற்றைக் கொண்டு செலுத்திவிடலாம். இங்கு இந்நகர்புறச் சூழலில் நிர்வாகம் அவ்வாறன்று.


பலவகைச் சூழல்களிலிருந்து மாணவச்சிறூர்கள் வருகிறார்கள். ஆசிரியர்களும் அவ்வாறே. எல்லாவகைச் சூழல்களையும் அறிந்து நடந்து கொள்ள வேண்டியுள்ளது. அன்பு வழி மட்டும் போதவில்லை. தீர்க்கமாக சிந்திக்கிற, முடிவெடுக்கத் தெரிகிற ஆற்றல் நிரம்ப வேண்டியிருக்கிறது.

**கே: தற்போது பரீட்சைப் பெறுபேறு, பல்கலைக் கழக நுழைவு, பட்டம், தொழில்வாய்ப்பு எனும் விடயம் ஒருபக்கம் நகர்ந்துகொண்டிருக்க மாணவர்களில் நல்லொழுக்கம் மற்றும் பண்பாடு ரீதியான வீழ்ச்சி நிலை பரவலாக உணரப்படுவதாக அறிய முடிகிறது. இது குறித்து உங்களது கருத்து என்ன?**

பிள்ளைகளுக்கு நம் காலத்தில் இருந்த ஆறுதல் அளிக்கிற அம்சங்கள் எதுவும் இப்போது கிடையாது. வழிகாட்டல்களும் போதுமானதாக இல்லை. தொழில்நுட்பச்சாதனங்கள் வாழ்நிலைகளை தலைகீழாக்கிப்போட்டிருக்கிறது என்பது பெரிய அவலம். பெற்றாரின் அன்பின்மையிலும், காப்பின்மையிலும் அல்லாடும் பல பிள்ளைகளைச் சந்திக்கிறோம். விரக்தி, அச்சம் என்பன அவர்கள் வாழ்வில் ஊடறுத்துக் கிடக்கக் காணுகிறோம். சிதைந்த சமூகத்தினதும், சிதைந்த குடும்பங்களினதும் அடையாளமாக என் பிள்ளைகளில் நிறையப் பேரைக் காண்கிறேன். சில கதைகள் வெளியிற் சொல்ல முடியாதளவுக்கு அவலம் மிக்கவை. அவர்களுக்கூடாக தினம் தோறும் கேட்கிற சில வித்தியாசமான கதைகளை எழுத்தாக்குகிற நோக்கமும் உள்ளது. சமூக மாற்றத்தினால் பாதிப்புக்குள்ளான இவர்களைக் குற்றம் சொல்வதில் நியாயமும் கிடையாது. மனசுக்குள் உழல்கிறோம் அன்றாடம்.

**கே: கையடக்கத் தொலைபேசி, பேஸ்புக் போன்ற சமூகவலைத்தளப் பாவனை மற்றும் தவறான இணையத்தளப் பாவனைகள் இன்று மாணவப் பருவத்தினரை வெகுவாக ஆக்கிரமித்துள்ளது. இதனால் பல்வேறு அசம்பாவிதங்களும் ஆங்காங்கே இடம்பெற்றவண்ணமிருக்கிறது. இதுவிடயம் குறித்த விளிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டிய கடப்பாடு பாடசாலைகளுக்கும் அதிகமிருக்கிறது. ஆனால் அவ்வாறான எந்தவொரு வேலைத்திட்டமும் எமது பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்களில்லை. ஒரு பாடசாலையின் அதிபர் என்ற வகையில் இதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

அரசு பாடசாலைகளுக்குள் கொண்டு வந்து திணித்திருக்கிற பெரும்பாலான பாடத்திட்டங்களின்




முன்னொரு காலத்தில் இருந்ததைவிடவும் ஆசிரியப் பணியும், அதிபர் பணியும் வேறு கோணத்தில் எதிர்ப்பார்க்கப்படுகிறது. வெறும் ஆவணம் நிரப்புகின்ற, ஆவணம் பேணுகின்ற நபர்களாக ஆசிரியர்களும், அதிபர்களும் மாற வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைய கல்விக் கொள்கைகள் நம்மை இட்டுச் சென்றுள்ளன.

பக்கமாகப் பார்வையைச் செலுத்தவே நேரம் போதாதிருக்கிறது.

முன்னொரு காலத்தில் இருந்ததைவிடவும் ஆசிரியப் பணியும், அதிபர் பணியும் வேறு கோணத்தில் எதிர்ப்பார்க்கப்படுகிறது. வெறும் ஆவணம் நிரப்புகின்ற, ஆவணம் பேணுகின்ற நபர்களாக ஆசிரியர்களும், அதிபர்களும் மாற வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைய கல்விக் கொள்கைகள் நம்மை இட்டுச் சென்றுள்ளன. மாணவர்கள் எதையும் ஆழமான கண்ணோட்டத்தில் நோக்குவதாயில்லை. தமது பரீட்சைப் பெறுபேறு மோசமாக வந்தால்கூட அதற்கான வருந்துகைகளை பிரதிபலிப்பதாக அவர்களது நடத்தை இல்லாதிருக்கிறது. மரியாதையுணர்ச்சி அடிமட்டத்திற்குச் சென்றுள்ளது. தாய் தந்தையரின் கடும் உழைப்பை வீணடிப்பதான குற்றவுணர்ச்சி அறவே அவர்களிடத்து இல்லை.

**ஒரு எழுத்தாளர் என்ற வகையிலும் உங்களிடம் ஏதும் திட்டங்களிருக்கிறதா?**

ஏலவே சொன்னமாதிரி கிராமப்புற பாடசாலைகளில் அதிபராக இருக்கையில் பள்ளிக்கூடத் தோட்டத்தில் பாய்கள் விரித்து வாசிப்பு, ஆடல், பாடல், இஸ்லாமிய மஜ்லிஸ்கள், நாட்டார் கூத்துகள் என்று கலைநேயமிக்க அம்சங்களில் கொஞ்சமேனும் கவனம் செலுத்த முடியுமாகயிருந்தது. இந்நகர்புறப் பாடசாலைகள் பரீட்சைகளை மையமாகக் கொண்டு பேயோட்டம் ஓடுகையில், எழுத்தாளர் மனசை மூட்டை கட்டி வைத்து விட்டு நாமும் சக்கரம் கட்டி இயந்திரத்தனமாய் ஓட வேண்டியிருக்கிறது. அவ்வப்போது இலக்கியத்தாகம் அலையெனப் புரளல் தவிர்க்க முடியாததாய் ஆகுகையில் இரவிரவாய் விழித்து இலக்கியம் சுவைத்து ஓய்கிறேன். விடிந்தால் மறுபடியும் காக்கிச்சட்டை பொலிஸ்காரனாய்

> **எத்தனை சிந்தித்தும் வாசிப்பின் தாகத்தை மாணவர்களுக்குள் விதைப்பதில் தோற்றுப்போய் இருக்கிறேன். வரட்சியான, வாசிப்புப் பழக்கம் இல்லாத ஆசிரியர்களும் இவ்வகை மாணாக்கரைத் தோற்றுவிப்பதில் பெரும்பங்காற்றியிருக்கிறார்கள்.**


நாம் பல மாணவர் நலனோம்பல் திட்டங்களை நமது பாடசாலைகளுக்குள் முன்னெடுத்து வருகிறோம். என்றாலும் அரச உதவி அவற்றுக்குக் கிடைப்பதில்லை என்பதால் நமது பள்ளிக்கூடங்கள் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றன. மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களைத் தேடுகிறோம். அரசும் ஆராய்கிறது. சில பிரச்சினைகளுக்கு அரசிடமும் கூடத் தீர்வு கிடையாது. அவ்வப்போது உளவளக் கருத்தரங்குகளுக்கூடாக பள்ளிக்கூடத்தை நேயமிக்க இடமாக மாற்றிமைக்கவும், அவர்தம் மனவடுக்களை ஆற்றவும் அவற்றுக்கு நிரந்தரத் தீர்வுகளைத் தேடவும் முயலுகிறோம். ஒன்றுபட்டு நின்று பகீரதப் பிரயத்தனங்கள் செய்தால் ஒழிய தீர்வென்பது அருகிலில்லை எனும் நிதர்சனத்தையும் மனக்கண்ணில் காண முடிகிறது.

**கே: எமது சமூகத்தின் வாசிப்புப் பழக்கத்தின் நிலை பற்றிய உங்களது பார்வை என்ன? மாணாக்கரிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த பாடசாலை அதிபர் என்ற வகையிலும்**

கடூர அதிபர் முகம் பூண வேண்டிய கட்டாயம். எத்தனை சிந்தித்தும் வாசிப்பின் தாகத்தை இவர்க்ளுக்குள் விதைப்பதில் தோற்றுப்போய் இருக்கிறேன். வரட்சியான, வாசிப்புப் பழக்கம் இல்லாத ஆசிரியர்களும் இவ்வகை மாணாக்கரைத் தோற்றுவிப்பதில் பெரும்பங்காற்றியிருக்கிறார்கள். ஒரு ஆங்கில ஆசிரியையாக வகுப்பறைக் கற்பித்தல் மேற்பார்வைகளுக்குச் செல்லுகையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆங்கிலக் கதைகள், கவிதைகள் எல்லாவற்றையும் புறந்தள்ளி வைத்துவிட்டு இலக்கணப்பகுதிகளை மட்டும் தொட்டுச் சென்றிருப்பதைக் காணுகிறேன். ஷேக்ஸ்பியரையும், ஷெல்லியையும், மாக்ஸிம் கோர்க்கியையும், வேட்ஸ்வேர்த்தையும் எனக்குச் சொல்லித் தந்த என் ஆசிரியர்களை நினைவு கூர்கிறேன் அடிக்கடி. பரீட்சைக்கு வராத பகுதி என்று கூறி திருக்குறள் பகுதியை அப்படியே கைவிட்டுக் கற்பித்திருக்கிற தமிழ் ஆசிரியர்களை என்னவென்பது? திருக்குறள் தெரியாத ஒரு மாணவன் தமிழில் சிறப்புப் பேறு பெற்று என்ன பிரயோசனம் சொல்லுங்கள்...?

II II II

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் பள்ளி ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

பாடசாலை, ஒருவனை வெறும் மாணவனாக மட்டுமன்றி அவனை மனிதனாகவும் மாற்ற வேண்டும் என அமெரிக்காவின் ஜனாதிபதிகளுள் ஒருவரும் மனிதாபிமானச் சிந்தனைவாதியுமான ஆபிரகாம் லிங்கன் ஆசை கொண்டார்.

தன் ஆசையினைத் தன் மகனின் பள்ளி ஆசிரியருக்குக் கடிதமாக எழுதி அனுப்பினார். வரலாற்றுப் புகழ்மிக்க அந்தக் கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கே தரப்படுகிறது...!

என் மகன் படிக்க வேண்டும். ஆம்! படிக்கத்தான் வேண்டும். எனக்குத் தெரியும்.
எல்லா மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர்.
உண்மையாக நடப்பவர்களும் அல்லர்.
இதனை அவனுக்கு அறிவியுங்கள்.

ஒவ்வொரு முரடனுக்கும் ஒரு ஹீரோ இருப்பான். அதே போல் ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன் கிடைப்பான் என்று அவனிடம் சொல்லுங்கள். இதற்கு சிறிது காலம் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அவனிடம் கூறுங்கள்.
சுயமாகச் சம்பாதிக்கும் ஒவ்வொரு நாணயமும் மாற்று வழியில் கிடைக்கும் நூறு நாணயங்களை விடப் பெரியதென்று அவனிடம் கூறுங்கள்.

வெற்றியைக் கண்டு களிப்படையும் அதே வேளை தோல்வி வந்தால் துவண்டு போகாமல் தன்னம்பிக்கையுடன் இருக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். பொறாமையைக் கைவிட்டுப் போட்டியைக் கை கொள்ளச் செய்யுங்கள்.

புத்தகங்கள் படிப்பதன் நன்மையை உணர்த்துங்கள். அதே சமயம் அவனைப் புத்தகப் புழுவாக்கி விடாமல் வான் முட்டும் மலைச் சிகரங்கள், எழில் கொஞ்சும் சோலைகள், பறக்கும் பறவைகள், பாய்ந்து வரும் ஓடைகள் போன்ற இயற்கை அன்னையளித்த அளப்பரிய அருட் கொடைகளை அனுபவித்து ரசிக்கும் ஆற்றலை அவனுக்கு அளியுங்கள்.

காப்பியடித்து வெற்றி பெறுவதை விடவும் பரீட்சையில் தோல்வியடைவதே மேலானது என்ற உண்மையை உரையுங்கள்.
தன் இலட்சியங்களில் மற்றவர் குறை கண்டாலும் மனந்தளராமல் முன்னேறும் வழியைப் போதியுங்கள்.
மற்றவர் சொல்வதைப் பொறுமையுடன் கேட்கப் பழக்குங்கள். முடிவெடுக்கும் சமயம் நேர் வழியில் நின்று தன் மனதில் “சரி” எனப் பட்டதை தயங்காது செயல்படுத்தும் துணிவை அவனில் ஏற்படுத்துங்கள்.

துயரம் சூழும் நேரம் சிரிக்கும் மனவலிமையை அவனிடம் உண்டாக்குங்கள். தற்புகழ்ச்சிக்கு அடிமையாகாது, முகஸ்துதிக்கு மயங்காமலிருக்கும் நடுநிலையுணர்வை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.
உழைப்பின் மகிமையை உணர்த்துங்கள். சோம்பலின் ஆபத்தை எச்சரியுங்கள். அதே வேளை பொறுமையின் மகத்துவத்தை அவனுக்குச் சொல்லுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதாபிமானத்தின் சக்தியையும் எந்த நிலையிலும் அதனைக் கைவிடாமல் இருக்கும் மனவலிமையையும் அவனிடம் உண்டாக்குங்கள்.
நான் ஆசைப்படுவது அதிகம்தான்!
அவன் என் ஆசை மகனல்லவா?
எனவே கொஞ்சம் முயற்சி செய்யுங்கள்.

இஃது,
ஆபிரகாம் லிங்கன். II II II



# எமக்குத் தேவை: புறத்தொதுக்கும் அனுகுமுறையல்ல, அறவணைக்கும் அனுகுமுறையே!

கருத்து வேறுபாடு என்பது மனித வாழ்வின் இயல்பும் இயற்கையுமாகும். இது குறித்த சமூகத்திற்கோ நாட்டிற்கோ மனிதக் குழுமத்திற்கோ அல்லது பிரதேசத்திற்கோ பிரத்தியேகமானதல்ல. இது இஸ்லாத்தைப் பொறுத்தவரையிலும் அந்நியமான ஒன்றுமல்ல. அதன் அடிப்படை மூலாதாரமான குர்ஆனும் நபி (ஸல்) அவர்களது அறிவுரைகளும் ஏற்றுக்கொள்கின்றன. குர்ஆனிய வாசகங்களைப் படிக்கும்போது தெரியும் அவற்றில் சில வசனங்கள் பல கருத்துகளுக்கு இடம்பாடான வகையில் அமையப் பெற்றுள்ளன என்பது புரியும். அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் தனது சமூகம் கருத்து வேறுபாடுகளால் பிரியும் என்றார்கள். எனவே கருத்துவேறுபாடுகள் என்பது புதியதோர் விடயமல்ல. ஆனாலும் கருத்துவேறுபாடுகளை நாம் கையாளும் அல்லது அனுகும் முறைகள் பற்றித்தான் நாம் சற்று ஆற ஆமரப் பேச வேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை கருத்துவேறுபாடுகள் பின்வரும் மூன்று முறைகளில் விளக்கப்படலாம்.

1. இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டு விடயங்களில் உள்ள கருத்து வேறுபாடுகள்.
2. இஸ்லாத்தின் கிளைப்பிரச்சினைகளில் அல்லது இஸ்லாமிய பிரச்சார வழிமுறைகளில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்.
3. அதி தீவிரத்திற்கும் தாராளவாதத்திற்குமிடையிலான கருத்து வேறுபாடுகள்.

நாம் இங்கு வாதிக்க எடுத்தவிடயம் மூன்றாம் வகையானதையாகும். இது மிகவும் நுணுக்கமாக அனுகப்படவேண்டிய ஒரு கருத்து முரண்பாடாகும். இஸ்லாத்தில் அதீத தாராளத்தன்மைகளை கடைப்பிடிக்கச்சென்று அதன் அடிப்படைகளையும் தாண்டிச் செல்லும் நிலைக்கும், அதி தீவிரப்போக்கில் சென்று பயங்கரவாதத்திற்குச்செல்லும் நிலைக்கும் இடையிலானதாக இந்த விடயத்தை நோக்கவேண்டி இருக்கிறது. இதில் சரியான ஒரு தெளிவின்மையே யுத்தங்கள் வரை எமது சமூகத்தை இழுத்துச்சென்றுள்ளது. அல்லது மாற்று மத வழிபாடுகளைக்கூட தாராளமாக கலந்து நிறைவேற்றக்கூடிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. அதி தீவிர நிலைக்கு உதாரணமாக தாலிபான் மற்றும் ISIS அமைப்புகளைக் குறிப்பிடலாம். இதற்கு தாராளவாத சிந்தனைக்கு மிக எளிமையான பொதுவான உதாரணமாக இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளைக் குறிப்பிடலாம். குறிப்பாகக் கூறுவதாயின் அண்மையில் எம்மைவிட்டுப்பிரிந்த அறிவியல் மேதை டாக்டர் அப்துல்கலாம் அவர்களது அனுகுமுறையைக் குறிப்பிடலாம். அப்துல்கலாம் அவர்கள் மரணித்தபோது முஸ்லிம் உலகு காட்டிய மனோ நிலைதான் இந்த கட்டுரையை இந்தத்தலைப்பில் எழுதத் தூண்டியது.

அப்துல்கலாம் அவர்களது இழப்பு பற்றி முழு உலகும் குறிப்பாக பாரத தேசமே இரங்கிக்கொண்டிருந்த வேளையில் எமது சமூகம், எமது சமூக அரசியல் தலைமைகள் மற்றும் ஊடகங்கள் அதனை அடக்கிவாசித்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. எம்மிடமுள்ள ஓரிரு ஊடகங்களில் கூட உட்பக்கத்தில் எங்கோ ஒரு மூலையில் அவரது இழப்பு பற்றிய விடயத்தைக் காணக்கூடியதாக இருந்தது. எமது பல்கலைக்கழகங்களில் கூட அது பெரியதொரு இடத்தைப் பிடிக்கவில்லை என்பதுதான் அவதானம்...! உண்மையில் அவருக்கு உலகமே இரங்கியதற்குக் காரணம் அவரது அறிவு முதிர்ச்சியும் கல்விச்சேவையும் நாட்டுப்பற்றும் மட்டுமே தவிர வேறு ஏதும் கிடையாது.


என்னைப் பொருத்தவரை முஸ்லிமகளாகிய நாம் அவருக்கு இரண்டு அடிப்படைகளில் இரங்கியிருக்கவேண்டும்.
1. அறிவியலுக்குப் பங்களிப்புச் செய்தவர், ஒரு கலிமாக் கூறிய முஸ்லிம், அவர் எமது இனம் என்ற அடிப்படையில்.




**எம்.எஸ்.முஹம்மது இக்ரிமா**

*The writer, M.S.Mohamed Ikrima is the Asst. Controller of Explosive of Ministry of Deffence of Sri Lanka. He has Msc. at University of Peradeniya and followong LLB degree at OUSL.*

யாழ்ப்பாணம்



ஐக்கிய நாடுகள் அவையில் ஏபிஜே அப்துல் கலாமின் 79 ஆவது பிறந்த நாள் உலக மாணவர் தினமாக அறிவிக்கப்பட்டது. அவர் 40 பல்கலைக்கழகங்கள் வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்கும், அரசின் விஞ்ஞான ஆலோசகராக பணியாற்றியமைக்கும், 1981 ஆம் ஆண்டில், பத்ம பூஷண் விருதையும், 1990 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதையும் இந்திய அரசு வழங்கிக் கௌரவித்தது. இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னாவை விஞ்ஞான வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பம் நவீனமயமாக்கலில் அவரின் மகத்தான மற்றும் மதிப்புமிக்க பங்களிப்புக்காக பெற்றார்.

2. அவர் பொதுவாக அறிவியலுக்கும் நாட்டுக்கும் சேவையாற்றிய மகான் என்பதன் அடிப்படையில்.

நாம் முதலாவதன் அடிப்படையில் அவருக்கு இரங்குவதற்கு எமது மார்க்கக் கோட்பாடுகளை அவர் மீறினார் என்பதனால் தவறினோம். உண்மையில் இதற்கு மார்க்கத்தில் என்ன தீர்வு என்பது எனதறிவிற்குத் தெரியாது. அதை நாம் மதிப்படவும் முடியாது. அது அவரையும் அள்ளாஹ்வையும் சார்ந்தது. எனவே முதலாவதன் அடிப்படையில் நாம் இரங்கத்தவறியிருந்தாலும் இரண்டாவது அடிப்படையிலாவது நாம் அவருக்கு இரங்கியிருக்க வேண்டுமென்பது எனது சொந்த அபிப்பிராயமாகும். காரணம் இந்நிலை நாம் அறிவியலையும் அறிவார்ந்த செயற்பாடுகளையும் மதிக்கத் தெரியாதவர்கள் எனும் அவப் பெயரை சர்வதேச அரங்கில் எமக்குத் தந்துவிடும்.

இந்த இடத்தில் நாம் முரண்பட்டவர்களையும் அறவணைத்துச் செல்லும், அவர்களை மதிக்கும் நல்ல பண்பைக் காட்டியிருக்கவேண்டும். நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் மனிதர்களை கொள்கைக்காக மாத்திரம் மதிக்கவில்லை. சிலரை அவர்களது அறிவிற்காக மதித்தார்கள். சிலரை அவர்களது நற்பண்புகளுக்காக மதித்தார்கள். இன்னும் சிலரை அவர்களுக்கு அவர்களது சமூகத்தில் இருந்த நன்மதிப்பிற்காக மதித்தார்கள். எனவே இங்கு ஒரு மனிதன் விடும் தவறுகளை மாத்திரம் வைத்துக்கொண்டு அவரைப் புறந்தள்ளி சமூகத்தைவிட்டும் தூரப்படுத்தும் வழிமுறையை விடுத்து அவர்களையும் அறவணைத்துச் செல்லும் வழிமுறையை நாம் எம்மில் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

ஒரு மனிதன் நிருவாக ரீதியாகக் கொண்டுள்ள கருத்துவேறுபாடுகளுக்காகக் கூட அவன் சமூகத்துரோகியாகப் பார்க்கப்படுவது அல்லது காட்டப்படுவது ஆபத்தானது. தங்களோடு சார்ந்து நின்று செயற்படும்போது மூஸாவாக மதிக்கப்பட்ட ஒருவன் தங்களோடு சிறிய முரண்பாடு ஒன்றை வெளிப்படுத்தும்போது பிர்அவுனாகப் பார்க்கப்படுகின்றான். அவன் மேல் இல்லாத பழிகள், புனைவுகள் எல்லாவற்றையும் சுமத்தி சமூகத்தளத்தைவிட்டே ஓரங்கட்டுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒருவனில் 90 நல்ல பயனுள்ள விடயங்கள் இருந்தாலும் 10 மறுவிய விடயங்களை மாத்திரம் தூக்கிப்பிடித்து அவனை புறந்தொதுக்கும் வழிமுறையை கையாள்வதன்மூலம் அவனது 90 வீத சமூகப் பங்களிப்பையும் இழந்துவிடுகின்றோம்.

சகல விடயங்களையும் நாம் செய்தால்தான் சரி, மற்றவர்கள் செய்தால் அது பிழை என்று கருதுவது தவிர்க்கப்படவேண்டும். நாம்தான் 100 வீதம் சரி என்று மற்றவர்களது பங்களிப்பை புறக்கணிப்பது அவர்களை அந்நிய தீய சக்திகளுடன் நெருக்கமாக்கிவிடும். அறபுலகில் தோன்றிய நம்பிக்கையூட்டிய அறபு வசந்தம் இப்போது எகிப்திலிருந்து சிரியா வரை அறபுலகில் அனாற்காற்றாய் வீசி சகோதரப் படுகொலைகளை மலிவாக்கியுள்ளமைக்கும் இந்த அனுகுமுறைதான் காரணம்.

எனவே நாம் அவசரமாக எம்மை மாற்றிக்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. புறத்தொதுக்கும் அனுகுமுறையை (Exclusive approach) த் தவிர்த்து அறவணைக்கும் அனுகுமுறையை (Inclusive Approach) நாம் பின்பற்றவேண்டும். கருத்து வேறுபாடுகள் ஒருபோதும் ஒருவரை ஒருவர் புறந்தள்ளுவதற்கு இட்டுச்செல்லக்கூடாது மாறாக முரண்பட்டவர்களையும் அறவணைத்து அவர்களிடமிருந்து எமது சமூகத்திற்கு குறைந்தபட்சம் எதைப்பெறமுடியுமோ அதனைப் பெற்றுக்கொடுப்பதே எமது சமூகத்தை அறிவியல் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்ல முடியும். இதற்கு மாற்றமாக நாம் செயற்படுவது எம்மை சர்வதேச சதுரங்கத்திலிருந்து ஓரங்கட்டிவிடும்! ||

# உயிரித் தொழில் நுட்பத்தின் வரலாறு

1663 - ரபர்ட் ஹூக்கின் கலக் (Cell) கண்டுபிடிப்பு

1675 - ஆன்டன் வான் லீவான் ஹூக்கின் பக்டீரியா கண்டுபிடிப்பு

1700 - பல Hybrid வகை தாவரங்களை ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள்.

1830 - புரதங்கள் கண்டுபிடிப்பு

1833 - முதல் enzyme கண்டுபிடிப்பு

1835 - எல்லா உயிரினங்களும் கலங்களால் ஆனவை, Matthias Sheiden மற்றும் Theoder schwann கோட்பாடு

1859 - சார்ல்ஸ் டார்வினின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த "On the Origin of Species" புத்தகம் வெளியீடு.

1861 - Louis Pasteur பால் பதப்படுத்தும் முறையைக் கண்டறிகிறார்.

1865 - ஜான் கிரகர் மெண்டல், Law of heridity ஐக் கண்டறிகிறார்.

1870 தொடக்கம் 1890 - பல வகை கலப்பினத் தாவரங்கள் உருவாக்கம்.

- விவசாயிகள் நைற்ரஜனேற்ற பக்டீரியாக்களைப்பயன் படுத்த ஆரம்பிக்கிறார்கள்.

1919 - "Bio technology" என்ற சொல் முதன் முதலில் பயன்படுத்தப்படுகிறது.

1928 - சேர். அலெக்ஸ்சான்டர் பிளெமிங்கின் பென்சிலின் (Antibiotic) கண்டுபிடிப்பு

1941 - Danish நுண்ணுயிரியலாளர் ஏ.ஜஸ்டின் "Genetic engineering" (மரபணுப் பொறியியல்) என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார்.

1942 - பென்சிலின் உற்பத்தி

1953 - ஜேம்ஸ் வாட்ஸனும், ரான்சிஸ் க்ரிக்கும் முதன் முதலில் DNA இன் Double helix வடிவத்தை விவரிக்கிறார்கள்.

1958 - முதன் முதலில் சோதனைக்குழாயில் DNA உருவாக்கப்பட்டது.

1968 - 20 அமினோ அமிலங்களை உருவாக்கும் மரபியல் குறியீடுகளை (Genetic codes) கண்டறிந்ததற்காக Marshal W. Nireberg உம் ஹர் கோபிந்த் குரோணாவும் நோபல் பரிசு பெறுகிறார்கள்.

1970 - முதல் restriction enzyme ஐ அமெரிக்க நுண்ணுயிரியலாளர் டேனியல் நேதன்ஸ் (Daniel Nathans) கண்டு பிடித்தார்.

1971 - முதன் முதலில் ஒரு முழு ஜீன் (Gene) சோதனைச்சாலையில் உருவாக்கப் படுகிறது.

1972 - DNA துண்டுகளை ஒட்ட உதவும் லைகேஸ் (DNA Ligase) முதன்முதலில் பயன்படுத்தப்படுகிறது.

- முதன் முதலில் இரண்டு வெவ்வேறு வைரஸ்களின் DNA துண்டுகளை இணைத்து recombinant molecule செயற்கை முறையில் உருவாக்கப்படுகிறது.

1973 - Stanley Cohen உம் Herbert boyer உம் சேர்ந்து recombinant DNA தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தனர். இந்நிகழ்வு நவீன உயிரித் தொழில் நுட்பத்திற்கு வித்திட்டதாகக் கருதப்படுகிறது.

1976 - ஒரு குறிப்பிட்ட ஜீனை (Gene) எந்தெந்த கார ஜோடிகள் (Base pairs) சேர்ந்து உருவாக்குகின்றன என்று கண்டறியப்படுகின்றது.

1977 - மிக நீளமான DNA துண்டுகளையும் வேகமாக sequence செய்வதற்கான செய்முறைகளும் கண்டறியப்படுகின்றன.

1978 - Recombinant மனித இன்சுலின் (Insulin) முதன் முதலில் உருவாக்கப்படுகிறது.

1980 - முதல் செயற்கை recombinant DNA மூலக்கூறினை உருவாக்கியதற்காக Paul Berge, Walter Gilbert, Fredrick Sanger ஆகியோருக்கு வேதியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1981 - முதல் transgenic விலங்கு - "The golden carp" சீன விஞ்ஞானிகளால் படியெடுக்கப் படுகிறது (Cloned).

1982 - கால் நடைகளுக்கான முதல் recombinant DNA தடுப்பு மருந்து உருவாக்கம்.

- சிறிய DNA துண்டுகளை விரைவில் பெருக்கம் செய்ய உதவும் "பாலிமரேஸ் சங்கிலித் தொடர் வினையை" (Poly merase chain reaction- PCR) Kary, Mullis ஆகியோர் கண்டு பிடிக்கின்றனர்.

1990 - உலகின் முதல் "மனித மரபு ரேகைத் திட்டம்" (Human genome project) தொடங்குகிறது.

1997 - டாலி எனும் படியெடுக்கப் பட்ட (Cloning) முதல் பாலூட்டி பிறப்பு.

- மனித மரபுரேகை மற்றும் மனித உரிமைகள் மீதான அனைத்துலக தீர்மானத்தை UNESCO அறிவிக்கிறது.

1998 - கிட்டத்தட்ட 30,000 ஜீன்களின் இருப்பிடத்தை வரையறுக்கும் "முதல் மாதிரி மனிதமரபுரேகை" அறிவிப்பு (First draft of human genome).

2000 - அமெரிக்க விஞ்ஞானிகள் Craig Vener மற்றும் Francis Collins முதல் முழுமையான மனிதமரபு ரேகையை உலகுக்கு அறிவிக்கிறார்கள்.

II II II

# அவனுக்கே அவன் அந்நியமானான்

கவிப்பேரரசு வைரமுத்துவின் “இன்னொரு தேசிய கீதம்” தொகுப்பிலுள்ள இந்தக் கவிதையானது நிகழ்காலக் கல்வி முறைமை பற்றிய நியாயமான விமர்சனமாகும். கல்வி, நடைமுறைகளைச் செப்பனிடவேண்டுமே தவிர மனிதனை நடைப்பிணமாக்கி விடக் கூடாது. நல்லதோர் கல்வி முறைமையை எதிர்பார்த்து நிற்கும் கவிஞரின் குரலை எமது நாளைய தலைவர்களும் செவிமடுக்கவேண்டுமெனக் கருதி இக்கவிதை இங்கே பிரசுமாகிறது...! (ஆ-ர்)

வகுப்பறைகளின்
புழுக்கத்தில் புழுங்கிப் புழுங்கி
மாணவர்களின் நுரையீரல்
வெந்துவிட்டது.

பல இளம்பெண்கள்
புத்தகச் சுமை பொறுக்காமலேயே
பூப்பெய்திவிட்டார்கள்!

பள்ளி செல்லும் சிறுவன்
ஒவ்வொரு விடியலிலும்
தான்
நாடு கடத்தப்படுவதாய்
நசிந்து போகிறான்!

பாலகர்கள்
சிலேட்டின் ஒரு பக்கத்தை
எச்சிலாலும்
மறுபக்கத்தைக் கண்ணீராலும்
துடைத்தழிக்கிறார்கள்!

அந்தச்
சிறு பறவைகளின்
இறகுகளை
கொள்ளிக் கட்டைகளாலா
கோதிவிடுவது?

எழுத்துக்களின் ஊர்வலத்தில்
அவர்கள்
காணாமல் போனார்கள்!

அவர்களோடு சேர்ந்து
துக்கம் கொண்டாடத்தான்
வகுப்பறைகளின் சுவர்கள்
கரும்பலகையை நெஞ்சில்
கருமையாய் அணிந்தனவோ?

அவர்கள் மூளையில்
விதையைப் போல்
தூவப்பட வேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப் படுகிறது.

இந்த
இள மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்!

பல மூங்கில்கள்
வளைக்கும் அவசரத்தில்
முறிக்கப்பட்டதால்
விறகுக்கடைகளில்
விற்பனையாயின!

இந்தப் பட்டறைகளில்
கூர்செய்யக்
கடப்பாரைகளைக் கொடுத்தோம்!
அவை
குண்டூசிகளாய்த் திரும்பின.


பல்கலைக் கழகமோ
பள்ளிக்கூடங்கள் தயாரித்துத்தரும்
சல்லடைகளில்
ஓடங்கள் செய்வதாய்
உத்தரவாதம்
தருகிறது.

இந்தக் கல்விமுறை
புதைத்த பிணங்களைத்
தோண்டியெடுத்துத்
துடைத்துக் கொண்டிருக்கிறது!

பாடத்திட்டம் படைப்பவர்கள்
சுட்டுவிரல்களால் தொட்டு நுகர்வது
மகரந்தமாம்!
இல்லை... இல்லை... அது
போன நூற்றாண்டின் புழுதி.

கல்விக் கழகங்களின்
உட்கூரைகளில்
தோரணமாய் மின்னுவன
சரிகைகளாம்!

இல்லை... இல்லை அவை
குருட்டு சிலந்தி பிண்ணிய
ஒட்டடைகள்!



(தொடர் பக். 18)

மனப்பாட மந்திரங்களைச்
சரியாக உச்சரித்தால்தான்
சரஸ்வதி வரந்தரச்
சம்மதிப்பாளாம்!

தேர்வுக் கூடமென்னும்
நரகச் சுரங்கம்தான்
சொர்க்கத்திற்குச் செல்லும்
சுருக்கு வழியாம்.

இந்தப் பல்கலைக் கழகங்கள்
வேலையில்லாதவர்களை
உற்பத்தி செய்யும்
தொழிற்சாலைகளா?

இந்தக் கல்வியால் லாபம்
மூக்குக் கண்ணாடியில்
மூலதனம் போட்டவனுக்குத்தான்!

நியூட்டன் விதியை விடவும்
தலைவிதியை நம்பும்
தலைமுறை படைத்தோம்

பட்டுப்போன ஒரு
பட்டதாரி கேட்கிறான்;
“ஆயிரம் அட்சரங்கள் கற்று
ஆவதென்ன?
வாழ்க்கைப் புத்தகத்தை
வாசிக்க முடியவில்லையே!”

எல்லாப் பத்திரிகையிலும்
மணமகன் வேலைமட்டும்
காலியாயிருக்கிறது.

சிகரெட்டின் நுனியில் தெரியும்
நெருப்பைத் தவிர
வேறேதும் வாழ்க்கையில்
வெளிச்சமில்லை.

குட்டிபோடும் என நினைத்துப்
பிள்ளைகள்
புத்தகத்துக்குள் வைக்கும்
மயிலிரகு மாதிரி...
பட்டம் மட்டும் பெயரோடு
பத்திரமாய் இருக்கிறது.

கல்விக் கூடம்
அவனைத் தன்னுள்
பதுக்கி வைத்திருந்து பிறகு
பிதுக்கி எறிந்து விட்டது

அவனுக்கே அவன்
அந்நியமானான்!

அவனது மாணவப்பருவம்
ஒரு
கடன் வாங்கிய வசந்தம்!

அவன் பாதங்களுக்குக்
கீழேயே
பாதைகள் முடிந்துவிட்டனவா?

மண்வெட்டி பிடிக்கும்
திராணியைக் கூட
மனப்பாடக் கரையான்
தின்று விட்டது.

முதுகுக்குப் பின்னால் அஸ்தமனம்!
முகத்துக்கு முன்னால் இருள்!
மூளையின்
பயன்படுத்தாத பரப்புகளைக்
கத்திரித்து எடுத்துவிட்டது இந்தக்
கல்வி!

படை வீரர்களைப்
படைக்க வேண்டிய கல்வி,
நடை நோயாளிகளைத் தயாரித்தது.


பிச்சை புகினும் கற்கை நன்றாம்!
கற்றபின் பிச்சை புகலும் நன்றோ?


வாழ்க்கைக்கும் வகுப்பறைக்குமிடையே
தொங்கும் திரைச்சீலையைத்
துணித்துவிடுங்கள்!
அது ஒன்றும்
திரௌபதியின் சீலையன்று.

பழைமையை ஆராதிக்கும்
பாடத்திட்டத்தை
நிரந்தரமாக நீக்கிவிடுங்கள்!


அது ஒன்றும்
கர்ணனின் கவசகுண்டலமன்று.
கல்வித் திட்டத்தில் இருக்கும்
செயற்கை ஒப்பனைகளைக்
கலைத்து விடுங்கள்.


ஆடம்பர அவசரத்தில்
புல்லாங்குழலைப் பொன்னில்
செய்து விடாதீர்கள்!
அது மூங்கிலாகவே இருக்கட்டும்!









# மழலை மாறாத வயதில் மன அழுத்தம்: ஏங்கும் பிஞ்சுக் குழந்தைகள்!











மழலை மறக்காத வயதில், குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதால், பெற்றோர்களின் ஆதரவு கிடைக்காமல், மனதளவில் வன்முறை வலைக்குள் குழந்தைகள் சிக்குவதாக, குழந்தைகள் நல ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்றைய பரபரப்பான உலகில், நடமாடும் இயந்திரங்களாக மனிதர்கள் மாறிவிட்டார்கள். குடும்ப வரையறைக்குள் நுழையும், கணவன், மனைவிக்கு குழந்தைகளை அக்கறையாக பார்த்துக் கொள்ளப் போதிய நேரம் கிடைப்பதில்லை.

இதனால், மூன்று வயது கூட ஆகாத குழந்தைக்காக, பலமணி நேரம் காத்திருந்து "அட்மிஷன் வாங்கி பள்ளியில் சேர்க்க, பெரும்பாலான பெற்றோர்கள் முன்வருகின்றனர். கூட்டுக்குடும்பம் உடைந்து தனிக்குடும்பம் உருவான பிறகு, கணவன் - மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால், குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆட்கள் இன்றி, "பிளே ஸ்கூல்" எனும் அறிமுகமில்லாத இடத்துக்கு, குழந்தைகளைப் படிக்க அனுப்புகின்றனர்.

மழலை மனம் மாறாத வயதில், இதுவரை அறிமுகமில்லா நபர்களின் பாதுகாப்பில், குழந்தைகளை விட்டுச் செல்வதால், பெற்றோர்களின் அறவணைப்புக்கும், அன்புக்கும் வாய்ப்புக் கிடைக்காமல், தனிமையில் ஏங்க நிறையவே வாய்ப்புள்ளது.

இப்படி, சிறிய வயதிலே அதிக நேரம் பெற்றோர்களை விட்டு பிரியும் குழந்தைகளுக்கு, எதையும் வெளிப்படையாக பேசத்தெரியாத மனநிலை உருவாக வாய்ப்பிருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும், பெற்றோர்களை விட்டு பிரியும் குழந்தைகள், மனதளவில் வெறுமையையும், வன்முறை குணாதிசயங்களோடும் இருப்பதாக, குழந்தைகள் நல ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

தனிமை, வெறுப்பு போன்ற குணநலன்கள் அதிகம் வளருவதால், குறிப்பிட்ட வயதை அடையும் போது, தான்தோன்றித் தனமாக முடிவெடுத்தல், பெற்றோரின் ஆதரவை நாடாமல் இருத்தல், மழலையாகப் பேச வேண்டிய வயதில், வயதுக்கு மீறிய செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றுக்கு வாய்ப்புள்ளதாக குழந்தைகள் நல மருத்துவர்கள் கூறுகின்றனர்.



**ஏ.ஏ.முஹம்மது சப்ரி**

*The writer, A.A.Mohamed Sabri is a School Teacher in Profession. He has also completed Diploma in Mass Media.*

மேலும், “பிளே ஸ்கூலில்”, நாகரிகம், படிப்பு, விளையாட்டு என பல நல்ல விசயங்கள் கற்று கொடுக்கின்றனர். ஆனால், அதை புரிந்துகொள்ளும் பக்குவம், நான்கு வயதிற்கு மேல்தான் வருகிறது. அந்த வயதிற்கு முன்னால் கற்றுக்கொடுக்கப்படும் விசயங்களால் குழந்தைகளின் மனதில், பள்ளியில் இருக்கும் நேரம் பெற்றோரை பிரிந்திருக்கிறோம் என்னும் எண்ணமே ஆழமாகப் பதிந்திருக்கும் என மனநல நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்திய மனநல நிபுணர் ஒருத்தர் கூறுகையில், “குழந்தைகளுக்கு இளம் பருவத்தில் பதியும் எண்ணங்களே, பிற்காலத்தில் வேர்விட்டுப் படர்கின்றன. இந்தப் பருவத்தில் குழந்தைகளுக்குப் பெற்றோர்களின், குறிப்பாக தாய்மார்களின் கண்காணிப்பும், அன்பும் அரவணைப்பும் அவசியம். குழந்தைகள் பெற்றோர்களைச் சார்ந்தே உள்ளனர். அவர்களாகவே எதையும் கேட்டுப் பெறாத நிலையில் உள்ளதால், புதிதாக ஒரு இடத்துக்கு அனுப்பப்படும்போது பயம், வெறுப்பு, பிரிவுக்கு ஆளாகின்றனர்.

இதனால், ஐந்து வயதுக்கு மேல்தான், குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவேண்டும். கல்வியைக் காட்டிலும், சுற்றுப்புற அறிவே, குழந்தைகளை அறிவுள்ளவர்களாக மாற்றும்.

கல்வியில் சிறந்த மாணவராக குழந்தைகளை உருவாக்குவதைக் காட்டிலும், சிறந்த மனிதராகக் குழந்தையை ஆளாக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. இதைப் புரிந்துகொண்டு, குழந்தைகளின் மழலை உலகத்துக்குச் சென்று, அவர்களோடு மனம் விட்டுப் பேசவும் நேரம் ஒதுக்குவது அவசியம்.” ॥ ॥ ॥

# போரியல் தொடர்பான சில கலைச்சொற்கள்

| | |
|---|---|
| அணிவரிசை | -Formation |
| அணிகள் | -ranks |
| அதிர்ச்சிப்படை | -shock force |
| அதிரடிப்படை | -Commando |
| ஆயுதப்படை | -armed force |
| இலக்கு | -mission |
| இடம்பெயராப்படை | -Stationary force |
| இயங்குகிரமப்படை | -mobile regular force |
| இயங்குதிறன் | -mobility |
| இராணுவம் | -military |
| இராணுவ விநியோகம் | -logistics |
| இராணுவக் கூட்டுத்தளம் | -military complex |
| உடைத்து | |
| உள்நுழைதல் | -Break through |
| உள உரம் | -morale |
| ஊழியர்கள் | -carders |
| எதிர்த்தாக்குதல் | -counter attack |
| எதிர்ப்புப்போர் | -resistance war |
| எழுச்சி | -insurrection |
| காவலர் | -guards |
| கிராம சேனை | -regular army |
| குடிப்படை | -militia |
| கூலிப்படைகள் | -mercenaries |
| கொள்கை | -policy |
| சுடுதிறன் | -fire power |
| செயல்தந்திரம் | -tactics |
| சேம அதிகாரிகள் | -reserve officers |
| சேமப்படை | -reserve force |
| சேனை | -army |



| | |
|---|---|
| தற்காப்பு நிலை | -defensive |
| தற்காப்புப்படை | -self defence force |
| தகர்த்து முன்னேறுதல் | -Break through |
| தாக்குதல் | -attack |
| திடீர்த்தாக்குதல் | -raid |
| துருப்புக்கள் | -troops |
| நேர்த்தாக்குதல் | -assault |
| நேரடி எதிர்த்தாக்குதல் | -counter assault |
| பக்கவாட்டுத்தாக்குதல் | -Flank attack |
| பட்டாளம் | -battalion |
| படை | -force |
| படைக்குழுக்கள் | -corps |
| படைத்துறை | -service |
| மரபுவழித்தாக்குதல் | -conventional warfare |
| முகாம் | -camp |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# என்ன? ஏன்? எதற்கு?

உலகில் பிறந்த எல்லா மனிதர்களுக்கும் மனதில் எழும் மூன்று வினாக்கள் என்றால் இதைத்தான் குறிப்பிட முடியும். மனிதனில் இந்த வினாத் தொடுக்கும் மனப்பாங்கும் அவற்றுக்கான விடை கண்டறியும் அவாவும்தான் இந்த நாகரிக வளர்ச்சியின் பின்னால் மறைந்திருக்கும் மிகப்பெரிய சக்திகளாகும். இதைத்தான் ஒக்ஸ்போர்ட் பலகலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானி மிரிஸியா எலியா குறிப்பிடும் போது "நான் உலகின் எந்தப் பாகத்திற்குச் சென்ற போதிலும் அங்குள்ள மனிதர்கள் நம்மைச் சுற்றி நடப்பது என்ன? நான் ஏன் பிறந்தேன்? எதற்காக வாழ்கிறேன் போன்ற வினாக்களை எழுப்பி அதற்கான விடைகாண முயற்சிப்பதையிட்டு வியக்கிறேன்" என்கிறார். ஆதலால்த்தான் அவர், இந்தக் கேள்விகளுக்கு விடை காணாதவிடத்து எமது வாழ்வின் நோக்கம் பூரணமடைவதில்லை என வாதிக்கிறார்.

உலக வரலாற்றில் வாழ்ந்த மனிதர்களிடையே இந்த வினாக்களுக்கான விடை தேடும் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் இந்த நூற்றாண்டிலேதான் அதிகம் வாழ்கிறார்கள். இந்த விடைகளைப் பெற்றெடுத்தவை விஞ்ஞானமும் தொழிநுட்பமும் மற்றும் அறிவியலின் பரந்து விரிந்திருக்கின்ற அனைத்துத் துறைகளுமாகும்.


நாம் புவிக்கிரகத்திலும் வாழ இயைபாக்கமடைந்து அடுத்த கிரகவாசிகளை நோக்கியும் இவ்வினாக்களைத் தொடுக்குமளவு முன்னேறிவிட்டோம்.

ஆனால் இப்பொழுதுதான் இக்கேள்விகளை சரியான கோணத்தில் கேட்கின்ற மிகப்பெரிய பொறுப்பை ஏற்கவேண்டும். நாம் நம்மையும் சுற்றியுள்ள சூழலையும் அறிய முயற்சித்தது போல் அதற்கான நோக்கத்தை அடைய முயற்சிக்கவில்லை. அறிவும் அதிகாரமும் உண்மையைக் கண்டறியும் இலக்கு நோக்கிய பயணத்தைப் புறக்கணித்துவிடுகிறது. ஆக்கிரமிப்புக்கும் சர்வாதிகாரத்திற்குமே அது பயன்படுகிறது.

தமது இனத்தை மறந்துவிட்டு அடுத்த கிரகத்தில் இன்னொரு இனம் எதற்காகத் தேடப்படவேண்டும்?
மனிதன் தனக்கான வரைவிலக்கணத்தை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. மனிதனின் ஒரு பகுதி வளர்க்கப்பட்டு மறுபகுதி அனாதையாக்கப்படுகிறது. உடல் பூஜிக்கப்பட்டு ஆன்மா புதைக்கப்படுகிறது. இங்குதான் இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டாக வேண்டும்.

வாழ்க்கை என்றால் என்ன?
ஆன்மா என்றால் என்ன?
ஏன் வாழ வேண்டும்?
நான் எங்கு செல்கிறேன்?
நான் ஏன் மற்றவர்கள் சொல்வதை நம்புகிறேன்?

போன்ற வினாக்களை முதலில் நம்மிடத்திலும் அடுத்து சுற்றியுள்ளவர்களிடத்திலும் கேட்கவேண்டும்.



ஏ.கே.முஹம்மது நஸ்மி

*The writer, A.K.Mohamed Nasmi is a medical faculty student of University of Jaffna. He is interested in researches of better humanity*

நாம் யாவற்றையும் விவாதத்திற்கு எடுத்து கேள்விக் கணைகளைத் தொடுக்கும் அதே நேரத்தில் எமது அறிவிற்கும் எல்லையிருக்கிறது என்பதை நாம் ஏற்பதும் மறுக்க முடியாத கடமையாகும். இல்லாவிட்டால் ஒரு முடிவற்ற குழப்பமான வாழ்க்கையையே நாம் வாழவேண்டி ஏற்படும்.

எமது சமூகத்திலே இருக்கும் மிகப்பெரிய குறைபாடு எதுவென்றால் சிந்திப்பதில் நாம் காட்டும் வெறுப்பையே குறிப்பிடலாம். ஆனால் மேற்படிக் கேள்விகள் சிந்தனையை ரசிக்கும் மனிதர்களுக்கே எழுகின்றன.

இப்பொழுது அறிவு பல துறைகளாகப் பிரிந்து ஒவ்வொன்றும் வானளவு வளர்ந்திருந்தாலும் அவற்றுக்கான முழுத்தொடர்புகள் அறியப்படவில்லை. ஒவ்வொருவரும் அவரவரின் அறிவைக் கொண்டு பெருமைப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு திசையில், சிலநேரம் முற்றிலும் முரணான திசைகளில் பயணிக்கிறார்கள். இப்பொழுதுதான் இந்தக் கேள்விகள் எழுகின்றன.

ஏன் நாம் அறிவைத் தேடவேண்டும்?
எமது வாழ்வுக்கான நோக்கத்தை நாம் எவ்வாறு அடைந்துகொள்வது?

இதைத்தான் தத்துவவியலாளர் சேர் ஹல்பிரட் ஜோன் மெக்கின்டர் பின்வருமாறு கூறுகிறார்,
“அறிவு என்பது ஒன்றுதான். ஆனால் அதனைப் பல பாகங்களாகப் பிரித்தது மனிதனின் பலகீனமாகும்”

சிந்திக்கத் தெரிந்த மனிதர்களும் பல சமயங்களில் கண்மூடித் தனமாகவே செயற்படுவதைக் காண்கிறோம். இதுவும் இந்த அறிவியலின் பலகீனமாகவே கருத முடியும். ஒரு முழுமையான பகுத்தறிவுள்ள மனிதன் உருவாக்கும் மாபெரும் இலக்கை இது இழந்துவிட்டது என்றே கூறலாம்.


இதைத்தான் தத்துவவியலாளர் அல்பிரல் நோர்த், “நாகரிகம் வளர்ச்சியடையும் போது சிந்திக்காமல் செயற்படுகின்ற மனிதர்களும் செயற்பாடுகளும் கூடிக்கொண்டே செல்கிறது” என்று குறிப்பிடுகிறார்.

நாம் யாவற்றையும் விவாதத்திற்கு எடுத்து கேள்விக் கணைகளைத் தொடுக்கும் அதே நேரத்தில் எமது அறிவிற்கும் எல்லையிருக்கிறது என்பதை நாம் ஏற்பதும் மறுக்க முடியாத கடமையாகும். இல்லாவிட்டால் ஒரு முடிவற்ற குழப்பமான வாழ்க்கையையே நாம் வாழவேண்டி ஏற்படும்.சில வினாக்களுக்கான விடைகளை யார் அதனைப் படைத்தார்களோ அவர்களைத் தவிர யாரும் சரியாக அறிந்திருக்கமாட்டார்கள் என்பதை ஏற்றுக்கொண்டாலே இந்தப் பாதையில் நாம் வெற்றி பெறலாம்.

உளவியலாளர் அன்ரு கிறீலே கூறும்போது, “உளவியலாளர்களால் அறியப்பட முடியாத. அவர்களின் ஆய்வுக்குள்ளேயே வராத மூன்று வினாக்கள் இருக்கின்றன. அவைதான் மனித இனம் இப்பூமியில் படைக்கப்பட்டதற்கான நோக்கம், வாழ்க்கையின் அர்த்தம், இறுதியாக மனித இனம் சென்றடையும் இடம் போன்றதாகும்” எனக் குறிப்பிடுகிறார்.

எனவே எந்த விடயமாக இருந்தாலும் அதற்கான காரணத்தையும் அர்த்தத்தையும் அறியும் நோக்கோடு வினாத்தொடுப்பதோடு இலக்குகளை மையமாகவைத்து பணிவோடு பயணிக்கும் போதே மாயைகள் அற்ற உண்மையான புதுயுகத்தை தரிசிக்க முடியும். ||





# படிப்பில் பின்தங்கும் மாணவர்கள்




***றினோஸ் ஹனீபா***

(உளவள ஆலோசகர்)

BSW (NISD), PDC (SEUSL), PgDPCS


குழந்தைகள் பாடசாலையில் சரிவர படிக்கவில்லை என்றால் அதற்கு காரணங்கள் பல... அவையாவன

* உடல் நலக் குறைவுகள்
* கண் பார்வைக் கோளாறுகள்
* காது மந்தம்
* உடலில் காச நோய்

போன்ற நாட்பட்ட வியாதிகளில் ஏதாவது ஏற்பட்டிருக்கக் கூடும். களைப்பு, பலவீனம், மனதில் பயம், திகில், தன்னம்பிக்கை இல்லாமை, கோழைத்தனம் இவற்றாலும் பாடத்தில் கவனம் செலுத்த இயலாமலிருக்கலாம். சொல்லிக் கொடுக்கும் பாடங்களோ வார்த்தைகளோ தனக்குப் புரியவில்லை என்றால் அதை எடுத்துச் சொல்ல தைரியமின்றி கவனிக்காமல் விட்டுவிடுவதும் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியரையோ அல்லது தன்னுடன் படிக்கும் குழந்தைகளையோ கண்டு பயந்து படிக்காமல் ஒதுங்கினாலும் படிப்பில் கவனம் செலுத்த இயலாமல் போய்விடும்.

இப்படி ஏதாவதொரு காரணத்தால் வகுப்பில் பின்தங்கி வரும் குழந்தையைத் திட்டுவதாலோ, தண்டிப்பதாலோ பலன் ஏற்படாது. மாறாக ஆசிரியரும் பெற்றோரும் குழந்தைகளுடன் இனிமையாகப் பேசி காரணம் என்னவென்பதைக் கண்டு கொண்டு அதற்குத் தகுந்த பரிகாரமளிப்பதுடன், குழந்தைக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் உண்டுபண்ணி வளர்க்க வேண்டும், நாளடைவில் இதே குழந்தை வகுப்பில் முன்னேறி விட வாய்ப்பேற்பட்டு விடும்.

வகுப்பில் ஒரு சில மாணவர்கள் எப்போதும் பின்தங்கிய நிலையிலேயே இருப்பார்கள். இவர்களுக்கு ஆசிரியர் வகுப்பில் பாடங்களை மிக வேகமாகச் சொல்லிக் கொண்டு போவது போல் தோன்றும், அதனால் அவர்கள் பாடத்தை புரிந்துகொள்ள இயலாமலும், படிப்பில் ஆர்வமில்லாமலும் காணப்படுவார்கள்.

இம்மாதிரி மாணவர்களை வகுப்பாசிரியர் குறிப்பாய் அறிந்து அவர்களைத் தனியாக அவர்கள் புரியும் வகையில் மெதுவாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். நாளடைவில் மற்ற மாணவர்களுடன் இணைந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

சில மாணவர்கள் உண்மையிலேயே படிக்கும் திறமை உள்ளவர்களாக இருந்தாலும், தங்கள் திறமையைத் தாங்கள் தெரிந்து கொள்ளாமல் தாங்கள் மற்ற மாணவர்களை விடப் படிக்க இயலாதவர்கள் என்று பயந்து விடுகின்றனர்.

பயத்தின் காரணமாகவே படிப்பில் கவனம் செலுத்தாமல் உண்மையில் பின்தங்கியும் விடுகின்றனர். இவர்கள் பயந்ததற்குக் காரணம் இவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்ளல்தான். வீட்டில் பெரியவர்களோ மற்ற மாணவர்களோ அவனை இழிவாகப் பேசுவதும், “அவனுக்கு எங்கே படிப்பு வரப்போகிறது..?” என்று கூறுவதும் இவனை அவ்வாறே நம்பச் செய்து விடுகின்றன. இது ஆங்கிலத்தில் Inferiority Complex (தாழ்ந்த மனப்பான்மை) என்று கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட மாணவர்கள் உண்மையில் மற்ற மாணவர்கள் போன்றல்லர். எல்லாத் திறனும் படைத்தவர்கள், எல்லாக் காரியங்களிலும் அவர்கள் மிகுந்த புத்திக் கூர்மையுடனும், கெட்டிக்காரர்களாகவும் இருப்பதை நாம் கண்ணால் பார்க்க முடியும்.


ஆரம்பத்திலேயே இவனை ஆசிரியர்களும், பெற்றோர்களும் அடையாளம் கண்டு தன்னம்பிக்கை பெற உதவ வேண்டும். உண்மையிலேயே அவன் கெட்டிக்காரன், மற்றக் குழந்தைகளை விட நன்கு படித்து முன்னேறக் கூடிய ஆற்றல் உள்ளவன் என்று அவனை நம்பச் செய்யவேண்டும். அவனுடைய மனச்சோர்வை நீக்கவேண்டும். படிப்பில் அவனுக்கு நுட்பமாகக் கற்பதை ஊட்டிவிட்டால் பின்னர் அவன் தானே ஒரு ஆற்றலுள்ள மாணவனாக மாறிவிடுவான்.

|| || ||

மக்களோடும் மாணவர்களோடும் இரண்டரக்கலந்து ஆசிரியர்களுக்கே முன்மாதிரியாய் வாழ்ந்து காட்டியவர் மர்ஹூம் எம்.உபைதுல்லாஹ் (ஸலபி) அவர்கள். கனேவல்பொல பிரதேசத்தைச் சேர்ந்த இவர், பரகஹதெனியா தாருத் தௌஹீத் அஸ்ஸலபியா கலாபீடத்தில் மார்க்கக் கல்வியையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்தவர். ஹொரவபொதான முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு மிகவும் பிடித்த ஆசிரியராகவும் சக ஆசிரியர்களுக்கு மிகப் பிடித்த நண்பராகவும் வாழ்ந்துகொண்டிருந்தவர்.

கடந்த 28.07.2015 அன்று திடீரென ஏற்பட்ட விபத்தொன்றில் சிகிச்சை பலனின்றி 30.07.2015 அன்று தனது 38வது வயதில் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வ இன்னாலிலைஹி ராஜுஊன். இவர் தன் மரணத்திற்கு முன் எவ்வாறு வாழ்ந்திருக்கிறார் என்பதற்கு பல்வேறு ஊர்களிலிருந்தும் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மக்களே சாட்சி. அவரின் பணிவு, அடக்கம், அமைதி, திறமை, அன்பு, போதனை போன்ற நற்குணங்கள் எல்லோரையும் கவர்ந்தன. யா அல்லாஹ்! இவருடைய பாவங்களை மன்னித்து மேலான சுவனத்தைப் பரிசளிப்பாயாக...!

# அன்பின் உருவத்திற்கு நண்பனின் இரங்குதல்கள்



– ரா.ப.அரூஸ் –

**கா**ற்சட்டைத் தோழனல்ல
பள்ளித் தோழனல்ல
பல்கலையில் படித்த
பல வருடத் தோழனல்ல
ஒரு வருடப் பழக்கம்தான்
அதில் -
ஒரு நூற்றாண்டு நெருக்கம்தான்
உடையாத இணக்கம்தான்!


சிறு வயதுத் தோழமை
சில காலம் நிலைக்கலாம்
புத்தி வந்த பிறகு அந்த
தோழமையும் கசக்கலாம்
பள்ளித் தோழமையில்
பக்குவங்கள் இருப்பதில்லை
அறியாப் பருவமது
அறிவினால் நட்பதில்லை

நமது நட்பிங்கே
அவசரத்தில் நேர்ந்ததல்ல.
எனதறிவை நீயும்
உனதன்பை நானும்
நன்கு உணர்ந்ததினால்
உதித்ததிந்த உறவு
உயிரில் கலந்தது
உன்னதங்கள் நிறைந்தது.

நாம் -
அறிவிற்காய் ஒன்றிணைந்தோம்
நீதிக்காய் ஒன்றிணைந்தோம்
சமூகத்தை நேசித்தோம்
நல்லதையே யாசித்தோம்.

■■■

சந்தேகக் கண்கொண்டு எனை
சண்டாளர் பார்த்த போது
சத்தியத்தை அறிய எண்ணி
புத்தியுடன் பழகிப் பார்த்தாய்
படைத்தவன் செய்த இந்த
விடை காணும் ஏற்பாடு
தடையேதும் இன்றி - நட்பில்
நடை போட வைத்ததிங்கே!



என் வானத்தில் வல்லூறு
வட்டமிட்ட வேளையிலே
தாய்ப்பறவை போல வந்து
தயங்காமல் காத்தவன் நீ.
பேய் போல மூடர்கள்
வாய் கிழியப் பிதற்றிடவே
சேய் போல எனைத்தாங்கி
சேய்மைக்குக் கொண்டு சென்றாய்!

"எனக்காக நீங்கள் உங்கள்
ஊரைப் பகைக்க வேண்டாம்"
என நானும் சொன்னபோது
"உண்மைக்காய் நீதிக்காய்
ஊரை மட்டுமல்ல - இந்த
உலகையும் பகைப்பேன்
உங்களுக்குக் காலம் வரும்" - என
உறுதியாய்ச் சொன்னவன் நீ!

என்னுடன் சேர்த்து உன்னை
அவதூறு சொன்னார்கள்
அல்லாஹ்வை மறந்தவர்கள் - நமக்கு
அநியாயம் செய்தார்கள்
பொறுமையாய் இருந்தோம்
பொங்கி எழவில்லை
நிம்மதி வேண்டி நீயும்
பிறந்த மண்ணை விட்டகன்றாய்!

எனை விட்டு தூரமாகி
மனதால் இன்னும் நெருக்கமானாய்
பிரிவுத் துயர் தன்னை
செல்போனில் அழுது தீர்த்தாய்
என்னோடு பேசாத
இரவுகள் இருந்ததில்லை
நித்தமும் பேசிவிட்டே
நித்திரைக்குச் செல்வதுண்டு!

ஊரார் சிலர் உன்னை
மனம் கொண்டு ஏற்கவில்லை
நீ சொன்ன உண்மைகளை
ஏறெடுத்தும் பார்க்கவில்லை
நன்மைகள் ஏதுமிங்கே
நவின்றவுடன் புரிவதில்லை
நண்பா நமை அந்தப்
படைத்தவன் புரிந்து கொள்வான்!

இவ்வுலகம் எனைப் புரியும்
காலம் வருமென்று - தினம்
எனைத் தேற்றும் நண்பனே!
உனைப் பிரிக்க சீக்கிரமாய்
காலன் வருமென்று நான்
கனவிலும் நினைக்கவில்லை
கலங்கி இங்கே நிற்கின்றேன்
விளங்கவில்லை எனக்கு ஏதும்...!

■■■

கண் விழிப்பாய் எனக்
கண்ணயராமல் காத்திருந்தேன்
கண்ணாடி வழியே உந்தன்
நாடித் துடிப்பைப் பார்த்திருந்தேன்.
எனைத் தனியே விட்டுவிட்டு
எங்கேயும் போகமாட்டாய்
என்பதிலே சித்தம் கொண்டு
உன்னருகே நின்றிருந்தேன்

வல்லோனின் ஏற்பாடு
நல்லோனை அழைத்துவிட்டான்
வருந்தித் தீர்த்துவிட்டேன்
பொருந்திக் கொள்வதன்றேல்
வேற்று வழி இல்லை. (இன்ஸா அல்லாஹ்),
மாற்றுக் கருத்தில்லை - உன்
ஜன்னத் வாழ்வு பற்றி - திரண்ட
ஜனாஸாக் கூட்டம் சொல்லும்!

■■■


ஆருயிர் நண்பனே உபைதுல்லாஹ்!
நன்றியுள்ளவன் நான்.
எந்தன் உயிருள்ள வரைக்கும்
உந்தன் குழந்தைகளுக்கு வழிகாட்டும்
நற் பாக்கியத்தை அல்லாஹ்
எனக்கு அருள வேண்டும்!
நல்ல பிரஜைகளாய் அவர்கள்
தரணியில் திகழ வேண்டும்!!

காதலி மரணித்தாள் - சாஜஹான்
தாஜ்மஹால் கட்டிவிட்டான்
என் நண்பன் மறைவையொட்டி
நான் நூலகம் அமைக்கவேண்டும்
நூல்களிலே பிரியம் கொண்ட
நூறாத தீபம் அவன்
தீராத ஆசைதனை நான்
தீர்த்து வைக்க வேண்டும்! ||

# இலங்கையில் தனியார் துறை உயர்கல்வியை நெறிப்படுத்தும் முறையான சட்டங்கள் நடைமுறையில் இல்லை!

-BCAS Campus' Chairman Abdur Rahman

By: R.F.Arooz



**பாடசாலை, அரச பல்கலைக்கழகங்-கள் என்கின்ற வட்டத்துக்குள்ளேயே கல்வி என்றிருந்த நிலை மாறி தற்போது தனியார் கல்வி முறைமை யிலும் அதிக ஈடுபாடு காட்டப்படுகிறது. இதன் விளைவுகள் குறித்து சற்றுத் தெளிவு படுத்துங்களேன்...?**

தனியார் உயர்கல்வியில் இருக்கின்ற முன்னேற்றம் என்பது உலகம் முழுக்கக் காணப்படுகின்ற தனியார் துறை முன்னேற்றத்தின் ஒரு பங்கு என்றே நான் கருதுகிறேன். கல்வி மாத்திரமன்றி பொருளாதார ரீதியான எல்லா விடயங்களிலும் உலகலாவிய ரீதியில் தனியார் துறையே முதன்மை வகிக்கிறது என்ற வகையில் உயர்கல்வித்துறையில் தனியார் துறை யின் பங்கு அதிகரித்து வருகின்றது.

இருப்பினும் கல்வி எனும் விடயம் ஏனைய வியாபார நடவடிக்கை களிலிருந்து வேறுபட்ட, எதிர்காலத்திற் கான மனித வளங்களைச் செதுக்கு கின்ற, சேவை மற்றும் அறிவு ரீதியிலான துறை என்றபடியால் இது ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் மற்றும் சாதக பாதகங் களைத் தனியாகவே பார்க்கவேண்டி -யிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரைக்கும் தனியார் கல்வித்துறை ஏற்படுத்தியிருக் -கும் பொதுவான சாதகம் யாதெனில், கடந்த 15 வருடங்களை எடுத்து நோக்குமிடத்து உயர்கல்விக்கான வாய்ப்பு மறுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருக்கின்றது. இதற்கு முன்னர் அரச பல்கலைக் கழகங்களில் மட்டும்தான்

உயர்கல்வியைத் தொடர முடியும் என்கின்ற நிலைமையும் சர்வதேச ரீதியிலான உயர்கல்வியானது வெளி நாட்டில் மட்டுமே தொடரப்பட முடியும் என்கின்ற நிலைமையும் இருந்தது. ஆனால் கடந்த 15 வருடங்களில் ஏற் பட்டிருக்கும் மாற்றமானது சர்வதேசக் கல்வித் தகைமையை மாணவர்களின் காலடியில் கொணர்ந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆரம்பக் கல்வி தொடங்கி உயர்கல்வி வரைக்கும் முழுமையாக இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இந்நிலைமை -யானது இலங்கையைப் போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு தொடர்ச்சியான சவாலாகவே இருக்கிறது.

அது மாத்திரமன்றி மறைமுகமான தொரு சுமையும் இதிலிருக்கிறது. அதாவது இலவசக் கல்வியினூடாகத் தமது மேற்படிப்பைத் தொடர்ந்தவர் களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிடுகின்றது.

அரசும் விரும்பியோ விரும்பாமலோ அரசியல் காரணங்களுக்காகவும் சமூக அழுத்தத்தினாலும் தொழில்வாய்ப்பினை வழங்குகிறது. ஆகவே கல்விக்கும் செலவு செய்து, படித்து முடித்த கணிசமானவர்களுக்கு தொழிலுக்குத் தகுதியா, தகுதியில்லையா என்பதையும் தாண்டி தொழில்வாய்ப்பு வழங்க வேண்டிய சுமையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே உயர் கல்வியை வழங்கவேண்டிய அரசாங்கத் -தின் கடமையைத் தற்போது தனியார் துறையும் கையிலெடுத்திருப்பது அரசுக் குச் சாதகமானதொரு விடயமேயாகும். இது அரசின் சுமையைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையே ஆகும்.

மாணவர்களுக்கான சாதகத் தன்மை -களைப் பொறுத்தவரைக்கும் தனியார் கல்வித் துறை வளர்ச்சியால் யாவரும் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பு வசதிகள் அதிகரித்துள்ளன. இந்நிலைமை சர்வதேச ரீதியிலும் கூட இலங்கை மாணவர்களுக்குத் தொழிற் சந்தையைத் திறந்து விட்டிருக்கிறது.

தனியார் கல்வித்துறையினால் இலங்கை யிலுள்ள பாதகமான விடயம் யாதெனில், இலங்கையில் தனியார் துறை உயர் கல்வியைக் கட்டுப்படுத்தும் அல்லது நெறிப்படுத்தும் முறையான சட்டதிட்டங்கள் நடைமுறையில் இல்லா மலேயே இருக்கிறது.

இங்கு யார் நினைத்தாலும் தனியார் கல்லூரியொன்றைத் தொடங்கி நடத்தக் கூடிய சூழலே இருக்கிறது. சாதாரண மானதொரு வியாபார அனுமதிப்பத்திரம் இதற்குப் போதுமானதாக இருக்கிறது. அது சம்பந்தமான தரக்கட்டுப்பாடோ கண் காணிப்பு முறைமைகளோ நடைமுறையி -ல் கிடையாது. இது மிகப்பெரியதொரு பாதகமான நிலைமையாகும்.


எனது அனுபவத்தைப் பொறுத்த வரையில், இலங்கையிலிருக்கும் எமது **BCAS Campus** ஆனது கட்டாரிலும் இயங்குகிறது. இதனை நாங்கள் கட்டாரில் ஆரம்பிக்க எவ்வளவோ போராடவேண்டியிருந்தது. அங்கு இதற்கான அனுமதியை எடுப்பதற்கே

Engr.Abdur Rahman graduated from the Peradeniya University in 1996 with second class honours in engineering specializing in Production Engineering. He also holds CIMA UK ( partial) qualification. Upon graduation, He was working as an academic staff at his Alma-mater the University of Peradeniya for a year. He joined the Hayleys Group in 1997 and worked there till he proceeded to UK for further studies in 1998. he had special training in curriculum development and Quality Assurance from the International Examination and Qualification Awarding Bodies in the UK, Singapore, etc.

He established British College of Applied Studies (BCAS) in 1999 and thus became its Chairman. He is also the director of Pac Asia Services PVT Ltd which is an international student placement company.

He also served in the SLMM (Sri Lanka Monitoring Mission) as the Government representative during the cease fire period in 2002 and he is founder member of PMGG (People Movement for Good Governance) and currently holds the position of Leader at NFGG (National Front for Good Governance)

**கல்வி இன்று வியாபார நோக்கில் மாத்திரம் அணுகப் படுகின்ற நிலைமையும் தனியார் துறையில் காணப்படுகின்றது. இதனால் கல்வி மலினப்படுத்தப் படுவதோடு உண்மையான ஆளுமைகளை உருவாக்க முடியாமலும் போய்விடுகின்றன.**




ஏறக்குறைய மூன்று வருடங்களானது. ஆனால் இலங்கையில் ஆரம்பித்த போது அவ்வாறான எந்தச் சிரமமும் எங்களுக்கு ஏற்படவில்லை. இதிலிருந்தே அங்கு எவ்வளவு தரக்கட்டுப்பாடு பேணப் படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள – லாம்.

இதன் விளைவு தரமில்லாத, எந்தக் கல்வித்துறைப் பின்னணியுமில்லாத ஏராளமானவர்கள் இந்தத்துறையில் நிறைந்து காணப்படுவதைக் காணலாம். இதனால் நிறைய மாணவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். காலம் மற்றும் பணவிரயத்திற்குட்படுத்தப்படுகிறார்கள். இந்நிலைமை தொடருமாக இருந்தால் பாரிய விளைவுகளை எதிர்காலத்தில் எதிர்நோக்கவேண்டியிருக்கும். அதாவது இலவசக் கல்வியில், காலம் செலவு செய்து படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருப்பது போன்று தனியார் கல்வியில், இருக்கின்ற பணத்தைச் செலவுசெய்து படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கவேண்டிய ஒரு துர்ப்பக்கிய நிலை உருவாகும்.

இன்றைய அரசாங்கம் தனியார் கல்வித் துறையைக் கட்டுப்படுத்தல், தரத்தைக் கவனித்தல் மற்றும் நெறிப்படுத்தல் என்பவற்றுக்கான சட்டதிட்டங்களை வகுக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அது உரிய வேகத்தில் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

**இலங்கை அரசு இலவசக் கல்விக்காக வருடா வருடம் 635570000 அமெரிக்க டொலர்களைச் செலவிடுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் பாடசாலைகளும் அரச பல்கலைக் கழகங்களும் நாட்டுக்குச் சுமையான, ஆளுமையற்ற வெளியீடுகளையே பெரும்பாலும் தன்னகத்தே கொண்டுள்ளன என்ற குற்றச்சாட்டும் நிலவுகின்றது. இது குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

**அரசு இலவசக் கல்விக்காகச் செலவிடும் பெருந்தொகைப் பணத்திற் -கான பிரதிபலன்கள் சரியாகக் கிடைக்கிறதா?**

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கற்றவன். அங்கு கற்று முடித்து வெளியேறி எனது தொழிற்துறைக்கு நான் வந்த போது நான் புரிந்துகொண்ட முதலாவது விடயம் யாதெனில் தொழிற்துறையை மையப்படுத்தியதாக அங்கு கற்கைநெறி யிருக்கவில்லை. அங்கு ஏராளமாகப் படிக்கிறோம். ஆனால் அவசியமில்லாத சம்பந்தமில்லாத விடயங்களைப் படிக்கிறோம்.

எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான அறி குறிகள் தென்படுவதாகவும் தெரிய - வில்லை. ஏனெனில் பல்கலைக்கழக - த்தில் கற்பிக்கும் பேராசிரியர்களே அங்கு ஊதியம் போதாது என அதனை விட்டுவிட்டு தொழிற்துறைக்குச் செல்லும் நிலைமையே இருப்பதாக உணரமுடிகிறது.

நான் தனிப்பட்ட முறையில் நாட்டுக்குச் செய்த பங்களிப்பாகச் சொல்லக் கூடிய ஒரு விடயம்தான் 2005ம் ஆண்டு QS கற்கை நெறியை ஆரம்பித்தமை. இக்கற்கைநெறி ஆரம்பத்தில் மொரட்டு வைப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே

ரூபா செலவும் உரிய பலனைத் தரா மைக்கான காரணம்.

பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறு கின்ற பட்டதாரிகள் அரசாங்கத்திடம் வேலைகேட்டு தொந்தரவு செய்வதற் கான காரணம் அவர்கள் தனியார் துறையில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுமளவிற்கான ஆளு மைகளாகப் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்படவில்லை என்பதே. குறிப்பாக அரச பல்கலைக்கழகங்களில் கலை, வர்த்தகத்துறைகளில் கற்கின்ற பெரும்பாலான மாணவர்களைப் பார்க்கும் போது அவர்களின்

## நாட்டின் தேவையை மையப்படுத்திய திட்டமிடலுக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட உயர்கல்வித் திட்டமிடலுக்கும் நெருக்கமான தொடர்பிருக்க வேண்டும். இந்நிலைமை எமது நாட்டில் ஏறத்தாழ பூச்சியம் என்றே நான் கருதுகிறேன்.

ஆகவே ஒரு நாட்டின் கல்வி முறைமைக் கூடாக உருவாகும் ஆளுமை அல்லது மனித வளம் நேரடியாக நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யவேண்டுமானால் நாட்டின் தேவை யை மையப்படுத்திய திட்டமிடலுக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட உயர்கல்வித் திட்டமிடலுக்கும் நெருக்க -மான தொடர்பிருக்க வேண்டும். இந் நிலைமை எமது நாட்டில் ஏறத்தாழ பூச்சியம் என்றே நான் கருதுகிறேன்.

வளர்ந்த நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாட்டுக்கு அவசியமான, அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு ஆரா -ய்ச்சிகளைச் செய்வதாகவே அங்குள்ள பல்கலைக்கழகங்களிருக்கும். அங்கு கற்றுவிட்டு வெளிறேும் மாணவர்கள் நேரடியாக அதுசார்ந்த தொழிற் துறையில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. இப்படியானதொரு நிலைமை இலங்கை -யில் இல்லை.

இருந்தது. அங்கிருந்து வருடா வருடம் ஏறத்தாழ 50 மாணவர்கள் மட்டுமே படித்து வெளியேறிக்கொண்டிருந்தார் கள். ஆனால் இதற்கான வேலை வாய்ப் -போ வெளிநாடுகளில் அதிகமிரு ந்தது. எனவே இத்துறையினை விருத்தி செய்து அதற் கான தொழில்வாய்ப்பில் தொடர்பு படுத்திவிடும் எந்தத் திட்டமிடலோ நடவடிக்கையோ இங்கிருக்கவில்லை.

ஆனால் நாங்கள் இக்கற்கை நெறியினை ஆரம்பித்ததன் பிற்பாடு இது இன்று பிரபலமான ஒரு தொழிற்துறையாக மாறியிருக்கிறது. இது எதனைக் காட்டு கிறதென்றால் இங்குள்ள அரசியல்வாதி களிடம் நாட்டின் தேவையறிந்து திட்ட மிடும் திறன் இல்லை. செலவு செய்கின்ற பணமெல்லாம் ஏதோ ஒரு வகையில் செலவு செய்யப்படுகிறது. ஆனால் நாட்டின் அவசியம் அறிந்து தேவையான செலவுகளோ திட்டமிடலோ மேற்கொள் ளப்படுவதில்லை. இதன் விளைவுதான் நீங்கள் சொல்கின்ற அத்தனை கோடி

ஆளுமை குறித்து கவலைப்படவேண்டி யிருக்கிறது.

**அண்மைக்காலங்களில் அரச பல்கலைக்கழகங்களில் ஏற்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நாட்டின் எழுச்சி குறித்த அக்கறை யிருக்கிறது, கடமையிருக்கிறது. ஆனால் நடத்தப்பட்ட அத்தனை ஆர்ப்பாட்டங் களும் நியாயமானதா, நாட்டின் நன்மை க்காக மேற்கொள்ளப்பட்டதா என்றால் அதில் சந்தேகமிருக்கிறது.

குறிப்பாக அண்மைக்காலங்களில் அரங்கேறிய போராட்டங்கள் இரண்டு அல்லது மூன்று விடங்களை மையப் படுத்தியதாக இருந்தன. தமது பல்கலைக் கழகத்தின் உள்ளக வளங்களை அதிகப் படுத்தவேண்டும் என நடைபெறுகின்ற கோரிக்கை மற்றும் தனியார் பல்கலைக்



கழகம் நிறுவுதலை எதிர்த்தமை என்ற வாறு அவர்களின் போராட்டத்தைப் பார்க்க முடிந்தது.

இதில் முதலாவது நோக்கம் நியாய மானது. உதாரணமாக கிழக்குப்பல் கலைக்கழகத்தில் என்னால் அவதானிக் கப்பட்ட விடயம், அங்கு மருத்துவபீடத் திற்கான வசதிகள் குறைவு. இவ்வாறான பல்கலைக்கழகங்களில் படித்து வெளி – யேறுவதனால் இரண்டு வகையான பிரதிகூலங்களுண்டு.

ஒன்று அங்கு படித்து வெளியேறுவோர் ஆளுமையற்றவர்களாக வெளியேறுவ தனால் அது அவர்களுக்கே பாரிய சவாலாக அமைந்துவிடுகிறது. மற்றையது அவ்வாறன மருத்துவர்களால் சிகிச்சை யளிக்கப்படும் நோயளிகளுக்கு ஏற்படும் பாதகம்.

ஒரு அரச பல்கலைக்கழகத்தில் மருத்து வத்துறையைக் கற்றவர் என்பதற்காக மாத்திரம் அவர் தரமான வைத்தியராகி விட முடியாது. எனவே இதற்காக தமது பல்கலைக் கழகத்தின் உள்ளக வசதிகளை அதிகப்படுத்துமாறும் தம்மை –த் தரமானவர்களாக வெளிக் கொணர வேண்டுமென்றும் அன்றேல் வேறு பல்கலைக்கழகத்திற்கு மாற்றுமாறும் கோரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இது நியாயமான போராட்டம்.

அதே சமயம் தனியார் பல்கலைக் கழகங்களுக்கெதிராக மாணவர்கள் நடாத்திய போராட்டம் நியாயமற்ற தானதொரு போராட்டம் என்றே கருது –கிறேன்.

அதாவது ஒரு தனியார் பல்கலைக் கழகம் எந்தத் தரத்தில் இருக்கவேண்டும், அதன் தரக்கட்டுப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்று பேசுவதை விடுத்து தனியார் பல்கலைக்கழகம் வேண்டாம், வேண்டாம் என்று கோசமெழுப்பினர். இது முறையான, ஒரு அறிவுபூர்வமான போராட்டம் என்று கருத முடியாது.

அதாவது நவீன உலகின் சவால்களை எதிர்கொள்வதற்கான ஆளுமைகளைத் தங்களில் விருத்தி செய்வது குறித்து சிந்திப்பதை விடவும் அந்தச் சவால்களை இல்லாமலாக்குவது பற்றியே இன்று அதிகம் சிந்திக்கிறார்கள். ஆனால் அது இயலாத காரியம். போட்டி அதிகரித்துக் கொண்டே செல்லும். போட்டியை இல்லாது செய்வதை விடுத்து போட்டிக் குரியவர்களாக நாம் மாறுவதே ஆக்க – பூர்வமானது.

இன்னொரு போராட்டம் நிகழ்ந்தது, அது பல்கலைக்கழக ஆளணியினரின் சம்பள

அதிகரிப்புக் குறித்த போராட்டம். உண்மையிலேயே இது நியாயமான தொரு போராட்டம்தான். ஏனெனில் எந்தத் தகுதியுமில்லாதவர்கள் அரசியல் பதவிகளுக்கூடாக இலட்சக்கணக்கில் ஊதியம் பெறுகின்ற நிலையில் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளுக்கான ஊதியம் போதுமானதாக இல்லை. எனவே சம்பள அதிகரிப்புக் கோரிக்கை நியாயமானதே.

முடிவாக, மாணவர்களே மாற்றத்தை உருவாக்கவேண்டியவர்கள். எனவே நியாயமான விடயங்களுக்காகப் போராடவேண்டியது அவர்களின் உரிமையும் கடமையுமாகும்.

இதே நிலையே தொடர்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

ஆனால் மாணவர்களும் பெற்றோரும் கல்விக்கான செலவீடுகளை ஒரு முதலீடு எனக்கருதி முன்னரை விடவும் பாரியளவில் மேற்கொண்டவாறுதான் இருக்கிறார்கள்.

தனியார் கல்வியினூடு கணிசமானோர் நல்ல நிலைமையை அடைந்திருப்பத னைக் கண்கூடாகக் கண்டு, நம்பிக்கை கொண்டு அவர்களது கல்விக்கான முதலீடு தொடர்ந்த வண்ணமேயிருக் கிறது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஒரு புறமிருக்க மக்கள் தமது பிற

சமூகம் பற்றிய பார்வை, அக்கறை என்பவற்றினால் வருகின்ற உணர்வு – களே அவை.

அரசியல் தலைமைத்துவத்தின் கடைமை மக்களுக்கு எல்லா வகையிலும் நல்ல நிலைமைகளை ஏற்படுத்திக்கொடுப்பது. இந்தச் செயற்பாட்டினை மிகவும் நேர்மையாகச் செய்வதே எனது அரசி – யல். இப்படியாக நூறு வீதம் மக்கள் நலன் சார்ந்த, நூறு வீதம் சுயநலம் சாராத ஒரு அரசியல் இந்த நாட்டில் சாத்தியமா என்று கேட்டால் இயல்பான பதில் “இல்லை” என்பதே. என்றாலும் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக அதனை முன்னெடுக்க விளைகிறோம்.

## மாணவர்களே மாற்றத்தை உருவாக்கவேண்டியவர்கள். எனவே நியாயமான விடயங்களுக்காக நாகரிகமான வழிமுறைகளில் போராடவேண்டியது அவர்களது உரிமையும் கடமையுமாகும்.

**நாட்டின் பொருளாதார நிலைகுறித்தும் பொதுமக்கள் தாம் தமது கல்விக்காக முதலீடு செய்வதில் அது எத்துணை யளவு பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக் கிறது என்பது பற்றியும் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் உங்களிடமிருந்து நல்ல தொரு தெளிவை எதிர்பார்க்கிறேன்...**

உண்மையிலேயே யுத்தக் காலப்பகுதி யில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகவும் மந்தமானதாகவே இருந்தது. ஏனெனில் பாதுகாப்புச் செலவீனங்கள் அதிகமாக இருந்தன. ஆனால் துரதிஸ்ட வசமாக யுத்த முடிவுக்குப் பின்னரும் இந்நிலையே தெடர்வதனைக் காணக் கூடியதாக வுள்ளது.

யுத்தக் காலப்பகுதியில் யுத்த செலவுகள் காரணமாகப் பொதுமக்களுக்குரிய பொருளாதார நன்மைகளைப் பெற்றுத் தர முடியவில்லை எனக் கூறப்பட்டது. ஆனால் யுத்த முடிவுக்குப் பின்னரும்

தேவைகளைச் சுருக்கிக்கொண்டு கல்வி க்கான முதலீடுகளில் அக்கறை காட்டுவ தாகவே நான் உணர்கிறேன்.

**இலங்கையில் கல்வி தனியார் மயப் படுத்தப்படுமானால் ஒப்பீட்டு ரீதியில் வினைத்திறன் மிக்க ஆளுமைகளை அதிகப்படுத்தலாம் எனக்கருதுகிறீர் களா?**

இது தனியார்மயப்படுத்தலுடன் மாத்தி – ரம் சம்பந்தப்பட்டதொன்றல்ல. நான் ஏற்கெனவே சொன்னதைப் போன்று முறையான தரக்கட்டுப்பாட்டுடன் கல்வி தனியார் மயப்படுத்தப்பட்டால் நிச்சய மாக வினைத்திறன் மிக்க ஆளுமை – களை அதிகம் கட்டியெழுப்பலாம்.

**உங்களது அரசியல் முன்னெடுப்பு – க்கள் குறித்து...**

பொதுவாக என்னிடமுள்ள அரசியல் பார்வைகள், அரசியல் முன்னெடுப்புக் கள் என்பனவெல்லாம் நான் சார்ந்த கட்சி, நான் சார்ந்த அமைப்புக்களி லிருந்து வருவதல்ல. என்னிடமுள்ள

**எதிர்காலத்திட்டங்கள்...?**

கல்வித்துறையைப் பொருத்தவரையில் எமது எதிர்காலத்திட்டம், இன்சா அல்லாஹ் கொழும்பிலும் கண்டியிலும் இருக்கும் எமது BCAS வளாகங்களைப் பல்கலைக்கழக நிலைமையை நோக்கி நகர்த்துவது. வெளிநாட்டு முதலீட்டோடு அதனை மேற்கொள்வதற்கான முயற்சி யில் இறங்கியிருக்கிறோம். ஏற்கெனவே இதுபற்றிய சில பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. இதற்கான இடத் தினையும் நாங்கள் அடையாளப்படுத்தி யிருக்கிறோம்.

அடுத்த இரண்டு வருடங்களில் கொழும் பிலும் கண்டியிலும் பல்கலைக் கழக வசதியும் சூழலும் கொண்ட அமைப்பாக எமது BCAS Campus நிறுவனம் விருத்தி செய்யப்படவிருக்கிறது. ◆

# மானுடத்தின் மாண்பு ஆசான்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது...!

தமக்குத் தெரியாத ஒரு விடயத்தைச் சொல்லிக் கொடுப்பவர்கள், தாம் ஆச்சரியப்படுகின்ற விடயங்களைச் செய்துகாட்டுபவர்கள் யாவரும் தம் வாழ்வில் முக்கியமானவர்களாகவே சாதாரணமாக எல்லோராலும் கருதப்படுவார்கள். அந்த வகையில் இவ்வாறான விடயங்களை ஒவ்வொருத்தர் வாழ்விலும் மிக அதிகமாக மேற்கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் ஆசிரியர்கள்தான் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எப்போதும் ரோல் மொடலாக இருக்கும் வாய்ப்புக்களைப் பெற்றவர்கள்.

ஆனால் அந்த வாய்ப்புக்களை ஒவ்வொரு ஆசிரியர்களும் இன்று சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்றால் திருப்தியான விடை கிடைப்பதற்கான சாத்தியம் அற்பமாகவே இருக்கின்றது.

ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களின் நேசத்திற்குரியவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும், மாணவர்கள் கண்டு வியக்கும் படியான ஆற்றல் பெற்றவராகவும் இருக்க முயற்சிக்க வேண்டும். தனது ஆசிரியர் இத்தகையவர் என்று வியந்து பேசும்படியான ஏதோவொரு துறைசார் ஆளுமை கொண்டவர்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும். தமக்குக் கற்பிக்கும் ஆசிரியரின் அருமை பெருமைகளை வீட்டிலும் பிறரிடத்திலும் ஒரு



மாணவன்: சேர்... நீங்க தமிழ் பாடம் படிப்பிக்கமாட்டீங்களா...?
கணக்குப் பாட ஆசிரியர்: இல்லை. நான் கணக்குப் பாட ஆசிரியர்

மாணவன்: சேர்... நீங்க கணக்குப் பாடம் படிப்பிக்கமாட்டீங்களா...?
தமிழ் பாட ஆசிரியர்: இல்லை, நான் தமிழ்ப் பாட ஆசிரியர்

மாணவன்: சேர்... நீங்க ஆங்கிலப் பாடம் படிப்பிக்கமாட்டீங்களா...?
வரலாறு பாட ஆசிரியர்: இல்லை. நான் வரலாற்றுப் பாட ஆசிரியர்.

மாணவன்: சேர்... நீங்க புவியியல் பாடம் படிப்பிக்கமாட்டீங்களா...?
விஞ்ஞானப் பாட ஆசிரியர்: இல்லை. நான் விஞ்ஞானப் பாட ஆசிரியர்

கடைசியில் மாணவன் எல்லோரையும் நோக்கிக் கேட்டான், "ஆசிரியர்களுக்கே ஒரு பாடம்தான் தெரியும்னா நான் மட்டும் ஏன் எல்லாப் பாடத்தையும் படிக்கனும். எல்லாத்திலயும் நல்ல ரிசல்ட் எடுக்கனும் என்டு எதிர்பாக்குறிங்க... நான் சின்னப்புள்ள... பாவமில்லையா...."


மாணவன் பேசிக்கொள்வதற்கு ரொம்பவும் ஆர்வப்படுகிறான். அவ்வாறு பேசுவதில் அவன் அலாதியான சுகத்தினை அனுபவிக்கிறான்.

அந்தச் சுகம் பெறும் எந்த மாணவனும் ஆசிரியரின் வழிகாட்டலிலிருந்து தவறிச் செல்லமாட்டான். அவ்வாறான ஆசிரியரின் ஒவ்வொரு வாசகத்தையும் அவன் ஏதோ வேத வாக்கைப் போல பின்பற்றத் தயாராயிருக்கிறான். ஆனால் அதற்கு நிறைய ஆசிரியர்கள்தான் இன்று தயாராயில்லை.

ஆசிரியர் என்பது ஒரு தொழில் மாத்திரமல்ல, அது ஒரு மாபெரும் சமூகக்கடமையாகவும் இருந்துகொண்டிருக்கிறது. அது, சமூகத்தைப் புணர்நிர்மானம் செய்யும் கடமை. ஒருத்தனுக்கு இருளிலிலே டோர்ச் லைட் அடித்து வழிகாட்டிவிடும் கடமை. அல்லது விரல் பிடித்து வாழ்க்கைப் பாதையில் நடைபழக்கும் கடமை.

ஆனால் இந்தக் கடமைகள் இன்று செல்வாக்கிழந்து, பொருள் சார்ந்த விடயமாகவே யாவும் நோக்கப்படுவதனால்த்தான் மனித குலம் இன்று கட்டுக்கோப்பின்றி நகர்ந்துகொண்டிருக்கிறது.


எனவே ஒவ்வொரு ஆசிரியர்களும் இதயசுத்தியோடு தமது கடமைகளை உணர்ந்து தொழிற்படும் போதுதான் மனித குலத்தின் மாண்பு மேலோங்கத் துவங்கும்! ‖ ‖ ‖



**ஓ.எல்.சமர்தீன்**

*The writer, O.L.Samardeen is an In Service Advisor (ISA) in Profession. He has B.A from Peradeniya University of Sri Lanka. He has more than 25 years of experience in teaching.*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# மனித குலத்தை பாதாளத்தில் தள்ளிவிடும் பணியில் இன்றைய ஊடகங்கள்...!

ஆரம்ப காலத்தில் ஊடகங்கள் என்பது மனித குல முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்து வந்தன. சமூகத்தில் அரங்கேறும் அநீதிகளுக்கெதிராகக் குரலெழுப்பி வந்தன. மானுடத்தைக் காக்கும் மகத்துவமான பொறுப்பைக் கையிலெடுத்து செயற்பட்டு வந்தன. ஆனால் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி ஊடகத்தின் அகத்தையும் முகத்தையும் மாற்றிக்கொண்டிருக்கின்றன. அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்வதைப் போன்றே இன்றைய ஊடகங்களில் பலவும் அத்தகைய சாக்கடை நிலைக்கு வந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுமளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இன்றைய ஊடக கலாசாரம் என்பது தாறுமாறான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் அரசியலில் சுயநலன்களும் பேரும் புகழும் எதிர்பார்க்கப் படுவதைப் போல இன்றைய ஊடகக்காரர்களும் சில விடயங்களை எதிர்பார்ப்பதேயாகும். பொருளீட்டல், புகழ் ஆகிய இரண்டு விடயங்களுக்கும் இன்று ஊடகங்கள் அடிமைப்பட்டு வருவதானேலேயே இன்றைய ஊடகங்களால் மனித குல எழுச்சிக்கு வழிவகுக்க முடியாமலிருக்கிறது.

இவையொரு புறமிருக்க இன்றைய ஊடகங்கள் மனித வர்க்கத்தை வழிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பிலிருந்து விலகி மனித குலத்தை வழிகெடுப்பதற்கான ஏற்பாடுகளையே அதிகமதிகமாய் மேற்கொள்வதனைக் காணமுடிகிறது. உலகில் என்றுமில்லாதவாறு கற்பழிப்புக்களும், கூட்டுவன்புணர்வுகளும், துஷ்பிரயோகங்களும், கொலைகளும், கொள்ளைகளும் பெருகி வர முழுமுதற் காரணமும் இன்றைய ஊடகங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளேயாகும்.

அதுவும் குறிப்பாக இன்றைய தொழிநுட்ப வளர்ச்சியினால் நாம் பெற்றுக்கொண்ட பேஸ்புக், வட்ஸ்அப், டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் கட்டுக்கோப்பின்றிய ஒரு நிலையினை எல்லோருக்கும் திறந்துவிட்டிருப்பதனால் பாரிய சீரழிவை நோக்கி யாவருமாய்ச் சேர்ந்து நகர்ந்துகொண்டிருக்கிறோம்.

இன்று இந்த ஊடக கலாசாரமானது கையடக்கத் தொலைபேசி எனும் கருவியினூடாக படித்தவன் முதல் பாமரன் வரையிலான எல்லோரினது ஆளுகைக்கும் உட்பட்டுவிடுகிறது. இதனால் தடியெடுத்தவனெல்லாம் தூண்டில்காரனாகிவிட்டான். சமகாலத்தில் அரங்கேறும் தற்கொலைகளுக்கு பெரும்பாலும் வித்திடுவது பேஸ்புக் எனும் சமூக ஊடகமே என சமீபத்திய ஆய்வொன்று குறிப்பிடுகிறது. அதுமாத்திரமன்றி இன்று ஒருவரைப் பற்றி ஒருவர் அவதூறுகளையும் பழிச்சொற்களையும் பரிமாறிக்கொள்வதற்கான இலகுவான தளமாக இன்றைய சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. இதன் விளைவு தற்கொலையிலோ அல்லது வன்முறையிலோ போய் முடிந்துவிடுகிறது.

இன்றைய ஊடக கலாசாரம் பற்றிய எதிர்மறைப் பக்கங்களை இவ்வாறு இன்னுமின்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். தொழில்நுட்ப வளர்ச்சியும் நவீனக் கண்டுபிடிப்புக்களும் இன்றியமையாதவைகள்தான். ஆனால் அவற்றை எமக்கு சாதகமாகப் பயன்படுத்தி மனித குல அமைதிக்கும் மேம்பாட்டுக்கும் வழிவகுக்க வேண்டியது எம்மனைவர் மீதுமுள்ள மிகப் பெரிய பொறுப்பாகும். எனவே இவ்விடயம் குறித்த ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை நாம் ஒவ்வொரு மட்டத்திலும் துவங்கவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். ||



**எம்.என்.றஸ்மின் ஷிஹானு**

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*


வறுமை வந்தால் வாடாதே
வசதி வந்தால் ஆடாதே


எனது வெற்றி என்பது
உடனடியானது அல்ல,
ஆனால் நிச்சயமானது...!

# இஸ்லாத்தில் மனித மதிப்பு




> இந்தக் கட்டுரையைப் படிப்பவர்கள்
> ஒவ்வொருத்தரும் தம்மைப் பற்றி
> சுயவிசாரனை செய்துகொள்ளுதல்
> எம்மில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்,
> இன்ஸா அல்லாஹ்!

இஸ்லாம் மார்க்கம் புனிதமானது. தனித்துவமானது. உலகத்தார் அனைவருக்கும் சொந்தமானது. இறைவன் இவ்வுலகில் பலதரப்பட்ட படைப்புக்களைச் சிருஷ்டித்துள்ளான். அவற்றுள் மனித வர்க்கமும் ஒன்றாகும். இறைவனது படைப்புக்களிலிருந்து மனித வர்க்கத்தை மேன்மைப் படுத்தியும் காட்டியுள்ளான். அந்த வகையில் மனிதன் கண்ணியமானவன். அந்த உள்ளத்தை ஒவ்வொரு உள்ளமும் மதித்து நடக்கவேண்டும். மனிதனைப் படைத்த படைப்பாளனே மனிதனைக் கண்ணியப்படுத்தும் போது, படைப்பாளனால் படைக்கப்பட்ட படைப்பினங்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் புரிந்துணர்வோடும் மரியாதையுடனும் நடாத்த வாழ்வைப் பழக்கிக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கட்டாயக் கடமையாக இருக்கிறது.

இறைவன் ஒருவனே என்னும் போது மனிதர்கள் அனைவரும் அவனது படைப்புக்களே என்பதும் தெளிவாகிறது. உலகில் ஏதாவது ஒரு பாகத்தில் இஸ்லாமிய ஆட்சி அமைகின்ற வாய்ப்பு இருந்தாலும் பூகோள அடிப்படையில் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டுமே மனித மதிப்புக்கள், மாண்புகள் பேணப்படவேண்டும் என்று இஸ்லாம் வரையறுக்கவில்லை. இஸ்லாம் வழங்கியிருக்கும் மானுட உரிமைகள் உலகளாவியவை. மனித குலம் முழுவதற்கும் பொருந்தக் கூடியவை. அந்த உரிமைகள் ஒரு மனிதன் இஸ்லாமிய அரசுக்குட்பட்ட எல்லையில் வாழ்ந்தாலும் சரி, அதற்கு வெளியே வாழ்ந்தாலும் சரி, எந்த நிலைமையானாலும் கடைப்பிடிக்க வேண்டியவைகளே!

ஆனால் இன்று நடந்துகொண்டிருப்பது என்ன...? நமது இஸ்லாமியர்களே தனிப்பட்ட கோபதாபங்களுக்காக தமது சகோதரர்களைப் பார்த்து வாய் கூசாமல் "காபிர்" என்று தமது மனோ இச்சைப்படி பத்வா கூறி பகையை வளர்த்து வாழும் நிலையையும் நமது சமூகத்தில் அவதானிக்க முடிகிறது.

உண்மையான மார்க்கத்தை ஏற்ற உள்ளம் ஒருபோதும் வாய்மைக்கு எதிராகச் செயற்படாது. பகைவர் என்று யாரையும் பகைக்காது. ஏனென்றால் அவ்வுள்ளம் இறைவனின் திருப்பொருத்தத்தையே நாடவேண்டும்.



ஏ.எஸ்.மிரிஸ்னா (இஸ்லாஹி)

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*

இஸ்லாத்தை ஏற்காத அன்றைய ஜாஹிலிய்யாக் கால மக்கள் மத்தியில் கோத்திரச் சண்டைகள், குரோதங்கள், பகை, போட்டி, பொறாமைகள் போன்ற பல்வேறுபட்ட துர்க்குணங்கள் நிறைந்து காணப்பட்டன. அதனைச் செப்பனிடவும், நெறி பிறழ்ந்தோரை நேர்வழிப் படுத்தவுமே அல்லாஹ் முஹம்மது நபி (ஸல்) அவர்களை அனுப்பிவைத்தான். இதனால் அவர்களது உள்ளங்கள் தூய்மைப்படுத்தப்பட்டன. இந்தக் காலகட்டத்தில்தான் அல்லாஹ் தன் திருமறையில் கீழ்வரும் வசனத்தை இறக்கினான்.

"நிச்சயமாக விசுவாசிகள் (ஒருவர் மற்றவருக்கு) சகோதரர்களே. ஆகவே (சண்டையிட்டுக்கொள்ளும்) உங்களுடைய இரு சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்...."

இதனை இஸ்லாமிய மனிதத்துவத்தின் அடிநாதம் எனக் குறிப்பிடலாம். இஸ்லாத்தைப் பொறுத்தமட்டில் மனித மதிப்பு மிகவும் பரந்துபட்ட ஒன்றாகும். அது முஸ்லிம்களிடம் மாத்திரம் சுருங்கிய ஒன்றல்ல. மாறாக முழு மனித சமூகத்தையுமே தழுவியதாகும். ஏனெனில் உலகில் பிறக்கின்ற மனிதர்கள் அனைவரையும் ஆதம் (அலை), ஹவ்வா (அலை) ஆகியவர்களின் பிள்ளைகளே என்பதனை ஒரு முஸ்லிம் உறுதியாக நம்பியிருக்கின்றான். ஆகையால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் மனிதாபிமான முறையிலும், கண்ணியமாகவும் நடந்துகொள்ளும்படி அல்குர்ஆன் கட்டளையிடுகிறது.

"ஆதமுடைய மக்களை நாம் கண்ணியப்படுத்தினோம்" (17:70) என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் சுமுகமாகப் பழகவேண்டும். அவருடன் நல்லவாராக நடித்துவிட்டு பின்னால் அவரைப்பற்றிக் குறை கூறுவது, தூற்றுவது இஸ்லாம் வெறுக்கும் காரியமாகும். ஆனால் இது இன்று எம்மத்தியில் சர்வசாதாரணமாக நடைபெறும் காரியமாகக் காணப்படுகிறது. அதிலும் மார்க்கத்தை நன்கு கற்றறிந்தவர்களில் சிலர் கூட இத்தகைய வெறுக்கத் தக்க விடயங்களில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இத்தகைய பண்புகள் மனித உள்ளத்தில் குடிகொண்டால் உள்ளம் சீர்கெட்டுவிடும். உள்ளம் சீர்கெட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும்.

**ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் சுமுகமாகப் பழகவேண்டும். அவருடன் நல்லவாராக நடித்துவிட்டு பின்னால் அவரைப்பற்றிக் குறை கூறுவது, தூற்றுவது இஸ்லாம் வெறுக்கும் காரியமாகும். ஆனால் இது இன்று எம்மத்தியில் சர்வசாதாரணமாக நடைபெறும் காரியமாகக் காணப்படுகிறது. அதிலும் மார்க்கத்தை நன்கு கற்றறிந்தவர்களில் சிலர் கூட இத்தகைய வெறுக்கத் தக்க விடயங்களில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.**

"முஸ்லிமை ஏசுவது பாவம், முஸ்லிமோடு போரிடுவது இறை நிராகரிப்பு" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

மேலும் இன்னொரு நபிமொழியில் மனிதர்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துவது ஷைத்தானிய செயற்பாடே என்பதைப் பறைசாற்றுகிறது.

"அரபுத் தீபகற்பத்தில் (அல்லாஹ்வைத்) தொழுபவர்கள் தன்னை வணங்குவார்கள் என்ற நம்பிக்கையை ஷைத்தான் இழந்துவிட்டான். எனினும் (தொழுகின்ற) அவர்களுக்கிடையே குரோதம் வளர்த்து பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் அவன் நம்பிக்கையிழக்கவில்லை" (முஸ்லிம்)

இந்த நபி மொழியானது மனித இனத்திற்கெதிராக ஷைத்தான் பயன்படுத்தும் அவனது வல்லமை மிக்க ஓர் ஆயுதத்தை சித்தரிக்கின்றது. ஷைத்தான் தனது எல்லா ஆயுதங்களும் பயனற்றுப் போனாலும் அவன் நம்பிக்கையிழக்காமல் பயன்படுத்தும் ஒரே ஆயுதம் எம்மிடையே பிளவுகளை ஏற்படுத்துவதே.

இன்று எம்மிடையே காணப்படும் பிளவுகளையும் ஒற்றுமையீனத்தையும் பற்றி சிந்திக்கும் போது மேற்படி ஷைத்தானின் ஆயுதம் வெற்றி பெற்றுக்கொண்டிருப்பதாகவே உணர முடிகிறது. அல்லாஹ் எம்மைப் பாதுகாக்கவேண்டும்.

குரோதம் வளர்ப்பவர்கள் பயனுள்ள எந்தப் பணிகளையும் சமூகத்தில் செய்வதில்லை. அவர்களது இயல்பும், அறிவும் மங்கி உணர்ச்சிகளும், வெறிகளும் உச்சமடைகின்றன. எதைப் பேசுகிறோம்? எதற்காகப் பேசுகிறோம்? ஏன் பிறரது மனதைப் புண்படுத்துகிறோம்? என்றெல்லாம் எந்தச் சிந்தனையுமின்றி பிறருக்கெதிரான பொய்யான

விளம்பரங்களையும் புனைக்கதைகளையும் இட்டுக்கட்டி விடுகின்றார்கள். இவ்வாறான நிலையில் அவர்கள் செய்கின்ற நல்லமல்கள் கூட எந்தளவு மறுமையில் கைகூடப் போகின்றன என்பது கேள்விக் குறியே.

குரோதம், பகையுள்ளம் கொண்டவர்களிடம் காணப்படும் மற்றோர் இயல்பு இதனை விடவும் மோசமானதாகும். ஒரு மனிதனோ அல்லது சமூகமோ நன்றாக இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. நல்ல பணிகளைச் செய்பவர்களை அவர்களால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. நல்ல பல மாற்றங்கள் இன்னொருத்தரால் அல்லது இன்னொரு குழுவால் ஏற்படுத்தப்படுவதானது அவரது மனதுக்கு ஒவ்வாமை மிக்கதாகவே இருக்கின்றது. அவ்வாறானதொரு சூழலைக் கெடுப்பதற்காக அவர் மற்றவர்களின் மீது அவதூறுகளையும் பழிச்சொற்களையும் சுமத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் பிறரின் குறைகளையும் துருவித்துருவி ஆராய்ந்து திரிவார்கள்.

"விசுவாசிகளே! எண்ணத்தில் பெரும்பாலானவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். (ஏனெனில்) நிச்சயமாக எண்ணத்தில் சில பாவமாகும். (எவருடைய குறைகளையும்) நீங்கள் துருவித்துருவி விசாரித்துக்கொண்டிருக்க வேண்டாம். உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவும் வேண்டாம். உங்களில் ஒருவர், தன்னுடைய சகோதரரின் மாமிசத்தை (அவர் இறந்து) சவமாகியிருக்கும் நிலையில் புசிக்க விரும்புவாரா? அதனை நீங்கள் வெறுத்துவிடுவீர்கள்" (49:12)

என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான். இந்த வசனமானது புறம்பேசுவதும் துருவித்துருவி ஆராய்வதும் மரணித்த உடலை உண்பதற்குச் சமனானது என்று குறிப்பிடுகின்றது. இன்னும் நபி (ஸல்) அவர்கள் இதுபற்றி,

"ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் இரண்டு கப்ருகளைக் கடந்து சென்ற போது இதனுள்ளே இருக்கும் இருவரும் வேதனைப் படுத்தப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் பெரிய விடயத்திற்காக வேதனைப்படுத்தப்படவில்லை என்றார்கள். தொடர்ந்து கூறுகையில், ஆம் அது பெரிய விடயம்தான். அதில் ஒருவர் மற்றவர்கள் பற்றிப் புறம் பேசித் திரிந்தவர். அடுத்தவர் மறைவிடத்தில் சிறுநீர் கழிக்காதவர் என்று கூறினார்கள்" (புஹாரி)

**குரோதம், பகையுள்ளம் கொண்டவாள் ஒரு மனிதனோ அல்லது சமூகமோ நன்றாக இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. நல்ல பணிகளைச் செய்பவர்களை அவர்களால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. நல்ல பல மாற்றங்கள் இன்னொருத்தரால் அல்லது இன்னொரு குழுவால் ஏற்படுத்தப்படுவதானது அவரது மனதுக்கு ஒவ்வாமை மிக்கதாகவே இருக்கின்றது. அவ்வாறானதொரு சூழலைக் கெடுப்பதற்காக அவர் மற்றவர்களின் மீது அவதூறுகளையும் பழிச்சொற்களையும் சுமத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் பிறரின் குறைகளையும் துருவித்துருவி ஆராய்ந்து திரிவார்கள்.**

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அத்தகையோர் மறுமையைப் பற்றியே மறந்துவிடுகிறார்கள். இத்தகையோரை சமூகம் இனம் கண்டு அவரது பொய்ப்பிரச்சாரத்தை நிராகரிக்க வேண்டும்.

"மூன்று நபர்களது தொழுகைகள் அவர்களது தலைகளுக்கு மேல் ஒரு சாண் அளவு கூட உயர்த்தப்படமாட்டாது.
1- மக்கள் விரும்பாத நிலையில் அவர்களுக்கு முன் இமாமாக நின்று தொழுகை நடத்துபவர்
2- கணவன் கோபப்பட்ட நிலையில் இரவைக் கழித்த மனைவி
3- குரோதங்களால் பிரிந்துபோன இரு சகோதரர்கள்" (இப்னுமாஜா)

எனவே மனித உள்ளங்கள் இறை வழிகாட்டல்களால் அறிவுறுத்தப்பட்டு, நல்ல சிந்தனைகளால் போஷிக்கப்பட்டு, குரோதம், பகை, பொறாமை, வஞ்சகம், இட்டுக்கட்டுதல், துருவித்துருவி ஆராய்தல் போன்ற கெட்ட பண்புகளிலிருந்து விடுபட்டு வாழத்துவங்கினால் அவ்வுள்ளங்கள் அதிசயங்களைக் காணும். அறிவு ஞானம் ஊட்டப்பட்ட உள்ளங்களாகத் திகழும். இவ்வாறான உள்ளங்களே இஸ்லாத்தின் மனித மதிப்புக்களை உணர்ந்து செயற்படும். இஸ்லாம் காட்டித் தந்த மனித மதிப்புக்களை மாசுபடுத்தும் மிக முக்கிய செயற்பாடுகளாக அவதூறு பேசுதல், புறம் பேசுதல், துருவித் துருவி ஆராய்தல் என்பன காணப்படுகின்றன.

எனவே ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அவனுக்கு அடுத்த சகோதரரின் மானம், சொத்து, இரத்தம் போன்ற அனைத்தும் ஹராமாகும். இதனை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி உபதேசத்திலும் கூறியுள்ளார்கள்.

"உங்களது மானம், சொத்து, இரத்தம் என்பன மற்றவருக்கு ஹராமாகும்" (அல் ஹதீஸ்)

எனவே இஸ்லாத்தை எத்திவைக்கும் எந்த உள்ளமாயிருந்தாலும் அவர்களது உள்ளத்தில் மாற்றார் பற்றி ஒரு கடுகளவு கூட பொறாமையோ, வஞ்சகமோ, குரோதமோ, பகையோ, துருவித்துருவி ஆராயும் குணமோ இருக்கக் கூடாது. அவ்வாறான உள்ளங்களால் ஒருபோதும் இஸ்லாத்தை சரியான முறையில் எத்திவைக்கவோ, இஸ்லாம் காட்டிய மனித மதிப்புக்களைப் பேணவோ முடியாமல் போய்விடும். இவ்வாறான நிலையிலிருந்து அல்லாஹ் அனைவரையும் பாதுகாக்க வேண்டும். ||

# இன்றைய கல்வி முறைமை சமூக எழுச்சிக்கு வழிவகுக்குமா..?



கல்வியறிவினால் ஏற்படுத்தப்படுகின்ற சீர்திருத்தமே உண்மையில் சிறந்த சீர்திருத்தமாக இருக்க முடியும். அந்த வகையில் உலகில் மாபெரும் சீர்திருத்தத்தை மேற்கொண்டு சாதனை படைத்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் ஒரு உம்மி நபியாக இருந்தாலும் அல்லாஹ் அவர்களுக்கு வஹியின் மூலம் ஏராளமான விடயங்களைக் கற்றுக்கொடுத்தான். அதனாலேயே அந்தச் சீர்திருத்தம் சாத்தியமாயிற்று. எனவே கல்வி என்பது மனித குலத்திற்கு இன்றியமையாத ஒரு விடயமாகும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

இதனால் பல்வேறு அறிஞர்களும் சாதனையாளர்களும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பலகோணங்களில் பலவாறு எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் இன்றைய உலகம் "கல்வி" என்கின்ற விடயத்திற்கு வைத்திருக்கும் வரையறை மற்றும் கல்வி முறைமை மேற்படியான சீர்திருத்தத்தை நேர்கொள்ள வழிவகுக்குமா என்றால் நிச்சயமாக இல்லை எனத் துணிந்து கூறலாம்.

இன்று எம்மில் பெரும்பாலானவர்களால் கொண்டாடப் படுகின்ற கல்வியானது வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளையும், பல்கலைக் கழக நுழைவுகளையும் பட்டங்களையும் அதனால் ஒரு தொழிலையும் மையப்படுத்திய ஒன்றாகவே காணப்படுகின்றது. அதாவது நேரடியாகச் சொல்வதானால் "காகிதத் தகைமை"யை மட்டுமே வேண்டி நிற்பதாகவே கல்வி எனும் விடயம் இன்று மாறிக்கிடக்கிறது.

இதனால்த்தான் எத்தனையோ பட்டதாரிகளையும் இன்னோரன்ன கல்வியலாளர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்தக் கல்வியால் இன்னும் மனித சமூகத்தின் அமைதியான, நிம்மதியான வாழ்வுக்கு வழிகாட்ட முடியாமலிருக்கிறது.

பயனுள்ள, பொருள் நிறைந்த, ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்வது கல்வியின் மிகப்பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும். அது மட்டுமல்லாமல் உலகில் அன்பும் அமைதியும் நிலைத்து நிற்கும்படி செய்து, போர்களே இல்லாத ஒரு உலகச் சூழ்நிலையை உருவாக்குவது கூட உண்மையான கல்வியின் முக்கியமான நோக்கமாகவே காணப்படுகிறது. உலகப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய மனநிலையை சிறந்த கல்வியால்த்தான் வழங்க முடியும்.

எனவே இத்தகைய விடயங்களை உள்ளடக்கியவாறு எமது கல்வி முறைமைகளை எவ்வாறு உருவாக்கலாம் என்பது குறித்து யாவரும் சிந்திக்க வேண்டும். எமது கல்வி முறைமை நடைமுறைக்கேற்றவாறு உலகச் சலால்களை வெற்றிகொள்ளக் கூடிய கல்வி முறைமையை நாம் அறிமுகம் செய்ய வேண்டும். உலகச் சவால்களை வெற்றிகொள்ளல் என்பதானது தற்போது தனியார் கல்வி நிலையங்கள் விளம்பரம் செய்வதைப் போன்று தொழிற் சந்தையை மாத்திரம் மையப்படுத்தல் எனும் விடயத்தைக் குறிப்பிடவில்லை. உலகச் சவால்கள் எனும் போது இன்று பொருளாதாரச் சவால்களையும் தாண்டிய ஏராளமான விடயங்கள் மலிந்துகிடக்கின்றன.

அவை யாவும் பண்பாட்டொழுக்கம் சார்ந்த சவால்கள். இவைகள் வெற்றி கொள்ளப்பட்டால்த்தான் பொருளாதாரச் சவால்கள், அரசியல் ரீதியிலான சவால்கள் என அத்தனை சவால்களையும் வெற்றிகொள்ள முடியும். எனவே மேற்படி பண்பாட்டொழுக்கத்தை எம்மில் விருத்தி செய்யக் கூடிய கல்வி முறைமை பற்றி யாவரும் சிந்திக்க வேண்டும். பாடத்திட்டங்களும் சரி கற்பிக்கும் ஆசிரியர்களும் சரி இவ்விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும். எனவே இதுபற்றிய முன்மொழிவுகள் இனி சமூகத் தளத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும். ||



ஏ.எஸ்.நவ்ஸியா

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# குழந்தை தேசம்



நிலா

மாசு கலக்காத
உயர்திணை உலகம்
உங்களுடையது
மட்டுந்தான்.

நீங்கள்
மழலைகளாகவே
மலர்ந்து கொண்டிருக்கும்
போதுதான்
மண்ணுக்கு மகிழ்ச்சி.

மனிதர்களின்
வறண்ட அறிவிலும்
வஞ்சகக் குணத்திலும்
பூமித்தாய் அடையும்
உளப்பாரத்தினை
உங்களைக் காணும்
கணங்களில்தான்
கொஞ்சம்
இரக்கி வைக்கிறாள்.

மனிதனொருவன்
சிரிக்கிறானென்றால்
எங்கேயோ
எவனையோ
வீழ்த்தியிருக்கிறான்
என்று அர்த்தம்.

அவன்
அழுகிறானென்றால்
எங்கேயோ
எவனிடமோ
வீழ்ந்திருக்கிறான்
என்று அர்த்தம்.

ஆனால்
உங்களின்
சிரிப்போ அழுகையோ
அவ்வாறானதன்று.

அதிலே இருப்பது
அழகு மட்டுந்தானே
தவிர
வேறெந்த
அழுக்குகளுமல்ல!

நீங்கள்
பேசும் போதுதான்
பூக்களின் மொழி
யாதென்று புரிகிறது!

அதெப்படி....
உங்கள்
பிஞ்சுடல் முழுக்க
பஞ்சு மெத்தையானது...?


இந்த உலகிலே
உங்களுடன் மட்டுந்தான்
மனந்திறந்து
பேச முடியும்
உங்களுடன் பேசும்
இரகசியங்கள்
ஒருபோதும்
பரகசியமாக்கப்படுவதில்லை
என்பதால்!

உங்களது
சாம்ராஜ்ஜியத்தில்
நிகழும்
குற்றங்கள் அனைத்தும்
கடவுளால்
வழுவமைதிகளாக
ஏற்றுக் கொள்ளப்பட்டவைதான்!

பொய், பொறாமை
களவு, கபடம்
கொலை, கொள்ளை
நக்கல், நகைப்பு
இவற்றுக்கெல்லாம்
உங்கள் அகராதியில்
பொருள் கிடையாது.

உங்களுக்கு
எவரையும்
தூசிக்கத் தெரியாது
அதனால்தான் - இங்கு
பூசிக்கப்படுகிறீர்கள்!

II II II




# எது உண்மையான நாகரிகம்...?:
## பெண்களின் ஆடைக் கட்டமைப்புக் குறித்த ஒரு பொதுப்பார்வை

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் மூன்றில் ஒன்றாக விளங்குவது ஆடையாகும். ஆரம்பத்தில் ஆடையின்றி வாழ்ந்த மனிதன் ஆடைகளை அணியத் தொடங்கியதிலிருந்துதான் அவனுக்குள் வெட்கம் என்கின்ற உணர்வும் பாற்கவர்ச்சி என்கின்ற விடயமும் கட்டமைக்கப் பட்டன.

அன்று தொடக்கம் இன்று வரை மனித குலத்தின் ஆடைக் கலாசாரம் என்பது இடத்திற்கு இடம் சமயத்திற்கு சமயம் மாறுபட்டுக்கொண்டிருக்கின்றன. நாகரிக மாற்றத்தில் ஆடை அணிதல் வடிவங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆடை கலாசாரம் என்பதன் பொதுவான வடிவங்கள் இவ்வாறிருக்க இன்று பெண்கள் அணிகின்ற ஆடைக் கட்டமைப்பு குறித்து பல்வேறு கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் ஆலோசனைகள் என்பன அடிக்கடி பல்வேறுபட்ட தரப்பினரிடத்தில் எழுந்தவண்ணமிருக்கின்றன. இவ்விடயத்திற்குப் பிரதான காரணம் உலகின் நாலா பாகங்களிலும் அரங்கேறுகின்ற பெண்களுக்கெதிரான பாலியல் ரீதியிலான வன்முறைகள் என்றே துணிந்து கூறலாம்.

எனவே இன்று பெண்களின் ஆடைக் கட்டமைப்பு என்பது இடம், சூழலின் தன்மை, சமய அடிப்படை என்பவைகளையும் தாண்டிய யாவருக்கும் பொதுமைப் பாடானதொரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கிறது.


ஆண் - பெண் என்கின்ற எதிர்ப்பால் விடயமும் அவ்வவர்களின் எதிர்ப்பால் உணர்வுகளும் ஒரு போதும் சமயத்தினாலேயோ அல்லது சூழலினாலேயோ தீர்மானிக்கப்படுவதன்று. இது உலகில் யாவருக்குமுள்ள பொது உணர்வாகும். எனவே இந்த உணர்வு ரீதியான விடயத்தில் இன்று பெண்களின் ஆடை பெரும்பங்கு வகிக்கின்றது என்றால் அவ்விடயம் குறித்து மனித குலம் ஒரு பொதுக்கருத்துக்கு வந்தேயாகவேண்டியிருக்கிறது.

இன்று ஆண் - பெண் கலந்து வாழுகின்ற சூழலில் பெண்கள் அணிகின்ற ஆடை அடுத்த ஆணைத் தவறு செய்யத் தூண்டுகின்றது என்றால் அந்தத் தவற்றுக்கு பெண்களும் சேர்ந்தே வழிவகுக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

அதற்காக ஆண் அவ்வாறு தவறு செய்வதை நான் நியாயப் படுத்துவதாக யாரும் கருதிவிடவேண்டாம். அடுத்தவரைத் திருத்துதல் மற்றும் நாம் விலகியிருத்தல் எனும் இருவகையான அணுகு முறைகள் இருக்கின்றன. இதனடிப்படையில் அடுத்தவரைத் திருத்துதல் எனும் விடயத்தை விடவும் நாம் விலகியிருத்தல் எனும் விடயம் ஒப்பீட்டு ரீதியில் இலகுவானதாகும். எனவே பெண்கள் தமது பாதுகாப்புக் கருதி இத்தகைய விடயங்களைச் சிந்திக்க வேண்டும்.

ஒரு பெண் அணியும் ஆடை அவள் எத்தகையவள் என்பதனைப் பிறருக்குப் பறைசாற்றுவதாய் அமைகிறது. அவள் அணியும் ஆடை அவளது கண்ணியத்தின் அளவைப் பிறர் எடைபோட வைக்கிறது. சில பெண்கள் அணிகின்ற ஆடை இயல்பிலேயே கெட்ட குணம் கொண்டவர்களைக் கூட தம் மீது மரியாதை கொள்ளச் செய்துவிடுகிறது. அதே சமயம் சிலருடைய ஆடை இயல்பிலே நல்ல குணம் கொண்டவர்களுக்குக் கூட இச்சையைத் தூண்டிவிடுகிறது. எனவே பெண்கள் தம்மை கண்ணியமானவர்கள் என்று அடையாளப்படுத்தும் படியான ஆடைகளை அணிந்துகொள்ளலானது தங்களுக்குப் பாரிய பாதுகாப்பினை வழங்கும்.

எனவே எவ்வாறான ஆடைகளை அணிவது தமக்குப் பாதுகாப்பினையும் நற்பெயரையும் வழங்கும் என்பது பற்றியும் உண்மையான நாகரிகம் என்பது எம்மை மேம்படுத்திப் பாதுகாப்பதாக அமைவதா? அன்றேல் எமக்குக் களங்கத்தை ஏற்படுத்தி துன்பங்களுக்கு இட்டுச்செல்வதா? என்பன குறித்தும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் சிந்திக்கவேண்டும்.II



**எம்.எம்.ஹஸீனா பேகம்**

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*

# நவீனக் கண்ணீர்...!

- ஒரு பக்கக் கதை -



"என்னாங்க... எவ்வளவோ கஷ்டப்பட்டுடிங்க அவனுக்காக... அவனப் படிக்கவைக்க நீங்க பட்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும். இதயும் எப்படியும் செஞ்சிடனுங்க. நமக்கென்ன வேற புள்ளயா இருக்கு...?"

"அதத்தான் நானும் சொல்றன். ஒரேயொரு புள்ளனுதான் நான் இவ்வளவு கஷ்டப்பட்டு அவனப் படிச்ச வெச்சன். அவனை அமெரிக்காகவுக்கு அனுப்பிவிட்டு நாம இங்கே தனியா இருக்க முடியுமா...?"

"பணமில்லங்கிறதுக்காக வேற காரணத்த சொல்றிங்க. அவன் என்கிட்ட வந்து அழுறான்... அவன் கூட படிச்சவங்க ரெண்டு பேர் அமெரிக்கா போயிட்டாங்களாம்..."

"ஆமா... அதுவும் ஒரு காரணம்தான். அவ்வளவு பணத்த நான் எங்பே போய் தேடுவேன்...?"

"என்னாங்க செய்யுற இப்ப...?"

"...................."

✦ ✦ ✦

"நீ ரெண்டு வருசத்துல உழைச்சிட்டு வந்திடுவன் என்றுதானே உன்ன அமெரிக்கா அனுப்பச் சொன்னாய்...? இது நான்காவது வருசம்... அடுத்த வருசம் வாரன்... அடுத்த வருசம் வாரன்... என்று எங்கள ஏமாத்திகிட்டே இருக்கா..."

"சும்மா எப்பவும் நொய் நொய்னு பேசிட்டு இருக்காதம்மா... இப்படியே பேசிட்டிருந்தா இனி போன் கூட பண்ணமாட்டன்..."

✦ ✦ ✦

"அப்பாக்கு உடம்பு ரொம்ப முடியாம இருக்குடா... உன்னப் பாக்கனும்னு ஆசைப்படுறார்..."

"நைட் ஸ்கைப்ல வாறன்..."

✦ ✦ ✦

"டேய் மச்சான் மனச திடமா வெச்சுக்கோ... உன் அப்பா..."

"அப்பாக்கு என்னாச்சு...."

"உன் அப்பா நம்மல விட்டுப்போய்ட்டாருடா..."

"ஓ... மை கோட்..."


"நீ எப்ப வர்ரா... எல்லோரும் உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டு இருக்காங்க..."

"இந்த வீக் புள்ளா ப்ரோஜக்ட் வேலை மச்சான். இதை முடிச்சுக் கொடுத்தா கம்பனியால ஒரு பிக் ஒப்போச்சுனிட்டி தாரன்னு சொல்லிருக்காங்க..."

"என்னடா பேசுறா நீ... நீ அவருடைய ஒரே புள்ள. நீதான் இறுதிச் சடங்கச் செய்யனும்..."

"சொரிடா... எல்லாருமா சேர்ந்து செய்துடுங்க... மறக்காம வீடியோ பண்ணி அனுப்பு... நான் பார்த்து அழனும்..."

அவனுக்குத் தெரியாது... அவன் அமெரிக்கா சென்றது தந்தையின் ஒரு சிறுநீரகத்தை விற்றுப் பெற்ற பணத்தில் என்பது...! ||




எஸ்.பாத்திமா சுஹானியா

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*



"நாளைய தலைவர்கள்" இதழை மாதாந்தம் தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்க: 0774244914




பிறப்பும் இறப்பும் - நம்
விருப்பப் படி அமைவதில்லை
வாழ்தலை யாரும் இங்கே
வனப்பாக வரைவதில்லை

தாயைத் தந்தையை நாம்
விரும்பித் தெரிவதில்லை
மீதியைத் தெரிவதற்கேன் - இங்கே
மிகையான சண்டைகள்...?

ஆசைகளற்றவன் இந்த
அகிலத்தில் எவருமில்லை
அதை அடையும் முறைதனில்தான்
ஆயிரம் பிரச்சினைகள்...!

விட்டுக்கொடுக்காவிடில் நம்
வாழ்வினில் விடியலில்லை - இன்று
தட்டிப் பறித்தல்கள்தான்
தலையெடுத்து நிற்கின்றன...!

மனிதாபிமானம் இன்று
மருந்துக்குக் கூட இல்லை - பிறர்
மானம் பறிப்பதில்தான்
மனிதரின் முயற்சியெல்லாம்...!

ரத்த பந்தம் முறித்தால் - நாம்
சுவர்க்கம் நுழைவதில்லை
கத்திகொண்டு அலைகின்றோம்
புத்தியற்ற மூடர் நாம்...!

சிறுவரிடம் அன்பின்றேல் - நாம்
தூதரின் வழியிலில்லை
இது தெரிந்தும் எத்தனையோ
துஷ்பிரயோகச் செய்திகள்...!

ஆசைகளற்றவன் இந்த
அகிலத்தில் எவருமில்லை
அதை அடையும் முறைதனில்தான்
ஆயிரம் பிரச்சினைகள்...! ||

**டபில்யூ. பாத்திமா சபா**
*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*




பச்சைப் புல்வெளிகள்
வளமான வயல்வெளிகள்
நீலக் கடல்வெளிகள்
நீந்திவரும் அதனலைகள்
அத்தனையும் இயற்கையன்னை
எமக்களித்த வெகுமதிகள்

வானத்து மின்மினிகள் - அதனிடையே
வட்டமான பாட்டி வீடு
மேகக் குழந்தைகள்
வியர்த்துக்கொட்டும் மழைத்துளிகள்
தாகம் தீர்க்கவெனத்
தேடிவரும் நீர்ப்பாதைகள்
மோகம் கொள்ளவைக்கும்
பட்சிகளின் பாட்டுக்கள்
அத்தனையும் இயற்கைதான்
அழகுணர்வின் பாசைதான்

இரும்பு இதயங்கள் நாம்
இங்கு இருந்து பார்ப்பதில்லை
இயற்கையைப் புறந்தள்ளி
இயந்திர வாழ்விலே
இடறித் திரிகின்றோம்

இயற்கையை நேசிப்பவனின் இதயம்
இதமாகவே அணுகும் எதையும்
இயற்கையை சுவாசிப்பவன் எவனும்
இறுமாப்புக் கொள்வதில்லை எதிலும்

இயற்கையை வாசிப்பவன் - தினம்
இன்பத்தையே சுவாசிக்கிறான்
செயற்கையைப் பூசிப்பவன் - நாளும்
செகத்தையே தூசிக்கிறான்

இயற்கையின் அழகினிலே
இனி நாற்காலி இட்டிடுவோம்
இதயத்தை இளைப்பாற்றி
இனி இன்பங்கள் சுவைத்திடுவோம்! ||

**எச்.எம்.பாத்திமா சர்மிலா**
*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*



# நமது பிள்ளைகளை நல்ல பிரஜைகளாக்குவது பற்றி சிந்திப்போம்...!

"சின்னஞ் சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே! என்னைக்
கலி தீர்த்தே உலகில் ஏற்றம்
புரிய வந்தாய்...!"

என்று பாரதி கூறிய கிளிகள் எமது அன்புச் செல்வங்களே. எமது வாழ்க்கை சிறப்படைவது எமது அன்புச் செல்வங்களினாலேயே. அச் செல்வங்கள் வளர்க்கப்படும் விதத்திலேயே நாட்டை ஆளும் அரசர்களாகவும் குடியைக் கெடுக்கும் குடிகாரர்களாகவும் மாற்றப்படுகின்றனர். எனவே பிள்ளைகளைச் சிறப்பாக வழிப்படுத்தி அவர்களுக்கு நல்லதோர் வாழ்வை ஏற்படுத்துவது பெற்றோர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பாகும்.

மனிதன் யாரும் பிறக்கும் போது கெட்டவர்களாகப் பிறப்பதில்லை. அவன் வளர்க்கப்படுகின்ற விதமும் சூழலுமே ஒருத்தனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. பெரும்பாலான பெற்றோர்கள் இயல்பாகவே தம் பிள்ளைகள் மீது அளவுகடந்த அன்பு கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் அந்த அன்பை வெளிப்படுத்தும் விதமும் பிரயோகிக்கும் வடிவங்களும்தான் கவனிக்கப்படவேண்டிய விடயமாக இருந்துகொண்டிருக்கிறது.


சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது வைத்திருக்கின்ற அளவு கடந்த அன்பே பிள்ளைகளைப் பாரிய மனஉளைச்சலுக்கு உட்படுத்தி விடுவதுமுண்டு. சில நேரங்களில் பிள்ளைகளுக்காகவே ஓயாது உழைக்கும் பெற்றோர் அந்தப் பிள்ளைகளையே கண்டுகொள்ள, கவனிக்க நேரமின்றி அலைகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் பிள்ளைகள் அன்புக்காக ஏங்குகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டும் விடுகின்றன.

வீட்டில் அன்பும் அரவணைப்பும் கிடைக்காத பிள்ளை வீட்டுச் சூழலை வெறுப்போடு பார்க்கின்றான். எப்போதுமே ஏதாவதொன்றை நச்சரித்துக்கொண்டிருக்கின்ற பெற்றோரிடமிருந்து தூரமாக ஆசைப்படுகிறான். போகின்ற இடங்களில் தங்கிவிடுவதும், நண்பர்களோடு நீண்ட நேரம் காலத்தைக் கடத்துவதும், காலந்தாழ்ந்தே வீடு வந்து சேருவதும், காதல் தொடர்புகளில் உடனே ஈடுபாடு வந்துவிடுவதும் இதற்கான அடையாளங்களேயாகும்.


குறை மட்டுமே கூறுவோரின் வார்த்தைகளை யாருமே மதிப்பதில்லை. அந்த வகையில் எப்போதுமே குறை சொல்லிக்கொண்டிருக்கும் பெற்றோரும் பிள்ளைகளுக்கு கசந்துவிடுவதுண்டு. இந்நிலைமையானது அவர்களது பேச்சுக்கு மாற்றமாகவே எப்போதும் முடிவெடுக்க பிள்ளைகளைத் தூண்டிவிடுகின்றது. தம் பிள்ளை ஒரு முறை செய்த தவற்றுக்காக சதா அதையே சுட்டிக்காட்டிக்கொண்டிருப்பதானது அதுவாகவே தம் பிள்ளையை மாற்றிவிடுமேயன்றி வேறெந்த நல்ல தீர்வுகளையும் தரப் போவதில்லை. இதற்கு முன்னர் பயந்து செய்த அந்தத் தவறு பின்னர் அவனுக்குப் பழக்கமான ஒன்றாக மாறிவிட இதுவே காரணமாகின்றது.

இவையொரு புறமிருக்க தற்போது பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் பரீட்சை பெறுபேற்றில் காண்பிக்கின்ற அக்கறையை அவர்களது பண்பாட்டொழுக்கத்தில் காண்பிப்பதில்லை. சமூக அங்கீகாரங்கள் பட்டங்களிலும் பதவிகளிலும்தான் தங்கியிருக்கின்றன என்றதொரு மாயை இன்று பெரும்பாலானவர்கள் மனதை அக்கிரமித்துள்ளமைதான் இந்நிலைமைக்குக் காரணமாகும். ஆனால் அத்தகைய பட்டங்களையும் பதவிகளையும் அடைந்த பின்னர் ஒருத்தன் அரங்கேற்றுகின்ற அசிங்கங்களை இன்றைய சமூகத்தில் காணமுடிகின்றது.

ஊழல் செய்யும் அரசியல்வாதி, நோயாளியைக் கற்பழிக்கும் வைத்தியர், இலஞ்சத்தில் ஊறிப்போன பொறியியலாளர், பணத்திற்காக எதையும் செய்யும் சட்டத்தரணிகள், மாணவர்களைத் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கும் ஆசிரியர்கள் என பதவியிலும் அந்தஸ்திலும் உள்ளவர்கள் இருந்தால் இத்தகையவர்களுக்கு சமூக அங்கீகாரம் கிடைக்குமா என்று இனியாவது ஒவ்வொரு பெற்றோரும் சிந்திக்கவேண்டும். ll



முத்து முஹம்மது பஸீஹா
*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*



# கலாமும் கலமும்

– கெகிறாவ ஸஹானா –

ஓடம் விட்டவன்
வானில் செயற்கை ஓடம் விட்டான்.
பேப்பர் விற்ற பையன்
பேப்பரின் தலைப்புச் செய்தியானான்.
வானில் பட்சிகளைக் கண்டு குதூகலித்தவன்
விண்வெளிப் பொறியியலில் வியத்தகு சாதனை புரிந்தான்.

தோமஸ் அல்வாவும், ரைட் சகோதரரும்
மார்க்கோனியும், கிரஹம் பெல்லும் ஆற்றியதைப் போலன்று
உன்னுடைய சேவை.
உலகம் எனும் பிரமாண்ட வெளியில்
அது பறந்து சென்றதொரு
மெல்லிய இறகுதான்.

எனினும்,
நீ தமிழன் என்பதால்
நாம் தலை நிமிர்ந்தோம்.
புண்ணிய பூமியாம் ராமேஸ்வரம்
மீண்டும் உன்னால்
பிரசித்தி பெற்றது.

ஜெயகாந்தனுக்கு நீ அளித்த
பாரத ஞானபீடம்
எம் தமிழ் நெஞ்சங்களில்
தேனில் கலந்த பால் ஆனது.

விஞ்ஞானி ஒருவன்
கலைப் புதல்வனாகவும்,
காவியத் தலைவனாகவும்,
ராஷ்டிரபதியாகவும்
மாணவர் உள்ளம் வென்ற
பேராசானாகவும்
இருந்தது புதிய வரலாறு.

திருமணமாகாதவன்
குழந்தைகள் பெற்றதும்
புதிய வரலாறுதான்.
ரோகினி , அக்கினி , ப்ருத்வி-
வானில் சுற்றி வரும் குழந்தைகள்;
உன் பேர் சொல்லும்
குழந்தைகள்!

எளிமை என்பது
பாரத உயர் பீடத்தின்
பாரம்பரிய லட்சணம் நேற்றுவரை.
ஜனாதிபதி மாளிகையில்
எளிமையின் வடிவமாய்
நீ திகழ்ந்த காலம்
பின்வருவோரும் பின்பற்றும்
வரலாறு ஆகும் ஒரு நாள்.

Fail என்பது உன் வாழ்வில்
First attempt in learning ஆனது.
End என்பது உன் அகராதியில்
Efforts never defeat என்றானது.
No என்பது உன் சரித்திரத்தில்
Next opportunity என்றானது.


கலாம், நீ கலத்தைக்
கையில் எடுத்தாய்
வியந்தது உலகம்.
நிமிர்ந்தது பாரத உப கண்டம்.

மானுடரே,
கலத்தைக் கையில் எடுங்கள்
வீண் கலகங்களைக் கைவிட்டு
சாத்வீக உலகம் காண.

எம் அன்புப் பேராசிரியரே,
உங்கள் மாணவக் குழந்தைகள் நாம்,
நீங்கள் விட்டுச் சென்ற
கலத்தைக் கையில் எடுத்து
உங்களுக்குப் பிடித்த
திருமறையின் வரிகளைக் கொண்டே
நாம் சாந்தி அடைகின்றோம்!

யா அல்லாஹ்!
உன்னையே வணங்குகிறோம்
உன்னிடமே உதவி தேடுகின்றோம்
உன்னிடமே மீள்வோம். ||

**பிற்குறிப்பு:** கலம் என்பது அரபி மொழியில் எழுதுகோல் என்று பொருள்படும். உலகத்தைப் படைக்க முன் அல்லாஹ் கலம் எனும் எழுதுகோலைப் படைத்து எழுதச் சொன்னான் என்றும், அது உலகில் பின்னர் நடக்கப் போகின்றவற்றை எழுதியது என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது. கலம் எனும் சொல் செயற்கைக் கலத்தையும் குறிக்கும்.




எழுத்தார்வமிக்க பாடசாலை மாணவர்களை இனங்கண்டு எழுத்துத் துறையில் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கான தேசிய ரீதியிலான வலையமைப்பை "நாளைய தலைவர்கள்" இதழ் உருவாக்கவுள்ளது. இத்திட்டத்தில் இணைந்துகொள்ள ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அண்மையில் உங்களால் எழுதப்பட்ட ஏதாவதொரு ஆக்கத்துடன் உங்களது சுயவிபரக் கோவை மற்றும் புகைப்படமொன்றையும் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

futureleaders@raapa.edu.lk

மேலதிக தொடர்புகளுக்கு: 0774244914



# கலந்து கற்றல் பற்றிய அவதானக் குறிப்பு

இன்றைய உலகு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டவண்ணமிருக்கின்றது. அவை பொருதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, இயற்கை அனர்த்தம் போன்றவாறு பல வடிவங்களில் காணப்படுகின்றன. அந்த வரிசையில் நாம் எதிர்கொள்ளும் மிக முக்கியமானதொரு பிரச்சினையே பால் ரீதியிலான பிரச்சினையாகும்.

செய்தித்தாள் தொடங்கி இணையத்தளம் என எங்கு பார்ப்பினும் இப்பிரச்சினைகளின் தாக்கங்களை நிறையவே புரிந்துகொள்ள முடிகிறது. கட்டுப்பாடில்லாத ஆண் - பெண் தொடர்புகள்தான் இத்தகைய ஏராளமான பிரச்சினைகளுக்கு வழிகோலுவதைப் பல இடங்களில் புரிந்துகொள்ள முடிகிறது. அதிலும் குறிப்பாக இவ்வாறான தொடர்புகளும் பிரச்சினைகளும் எங்கு அதிகம் அரங்கேற்றப்படுகின்றன என்றால் அவை கல்வித் தளங்களாகவே காணப்படுகின்றன.

பண்பாடுகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பிலுள்ள இடங்களில் இத்தகைய மிலேசத் தனங்கள் இடம்பெறுவது கட்டாயம் சிந்திக்கப் படவேண்டிய பிரச்சினையே ஆகும். கல்வித் தளம் என்று சொல்லும் போது பாடசாலைகள், தனியார் வகுப்புக்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதிலும் குறிப்பாக பாடசாலைப் பருவமானது பக்குவப்படாத ஆரம்பப் பருவமாகும். இத்தகைய பருவத்தில் ஆண்-பெண் கலப்பு சூழலானது மாணவப் பருவத்தினரில் பல்வேறு தீய தாக்கங்களை உண்டுபண்ணி விடுகின்றது.


ஆண் - பெண் கலந்து கற்பதனால் புரிந்துணர்வு மற்றும் சமூகமயமாக்கச் சிந்தனை தோன்றுவதான ஒரு வாதமிருந்தாலும் இவைகளையும் தாண்டிய அசம்பாவிதங்களே அதிகம் அரங்கேறுவதனை தற்போது நடைமுறையிலேயே கண்டுகொள்ள முடிகிறது.

இத்தகைய பருவத்தைத் தாண்டி வந்த பெற்றோர்களும் ஆசான்களும் இவ்விடயத்தில் பராமுகமாக இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். அதிலும் கல்வியைக் காரணம் காட்டி இத்தகைய விடயங்கள் அரங்கேற்றப்படுவது இன்னமும் கவலை தரும் விடயமாகும். ஏனெனில் எந்தவொரு நல்ல விடயமும் தவறான பாதையினூடாக அடையப்பட முடியாது என்பதனை நாமனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும் தாண்டி மார்க்கம் இது விடயத்தில் மிக அழகான, தெளிவான வழிகாட்டல்களைத் தந்திருக்கிறது. ஆனால் உலக ஆசை அத்தகைய வழிகாட்டல்களைப் புறந்தள்ளிவிடுகிறது. இதுவே இன்றைய பிரச்சினைகளுக்கு முழுமுதற் காரணமாகும். எது எவ்வாறாயினும் இறை வழிகாட்டல்களைக் கடந்து இங்கு எவரும் அமைதியான வாழ்க்கையை அடைந்துகொள்ள முடியாது.


ஆனால் நமது நாடு, சூழல் அமைப்பு என்பன ஆண் - பெண் கலவன் சூழலை அவ்வளவு சீக்கிரமாக முற்றுமுழுதாகச் சரி செய்ய இயலாமல் இருக்கலாம். ஆனால் அதற்காக இவ்விடயங்களைக் கண்டுகொள்ளாமலேயே இருந்துவிட முடியாது. பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இதுவிடயத்தில் மாணவர்களை எவ்வாறு வழிப்படுத்தலாம் என்றும் இத்தகைய தவறுகளிலிருந்து எவ்வாறு காப்பாற்றலாம் என்றும் சிந்திக்க வேண்டும்.

ஏனெனில் பாடசாலைப் பழக்கங்கள்தான் ஒருவரின் பல்கலைக் கழக வாழ்வு மற்றும் தொழிற் தளம் என்பவை வரைக்கும் இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இந்த அண் - பெண் தவறான தொடர்புகள் என்பவை இன்றைய உலகின் பாரிய சவால் என்பதனை நிறையப் பேர் இன்னும் உணரவில்லையோ தெரியவில்லை...! ||



எம்.ஆர்.சியானியா

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*



# facebook: அவதானக் குறிப்பு

இன்றைய உலகம் புது யுகத்தினை நோக்கி வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது. புதுப்புதுக் கண்டுபிடிப்புக்களால் புளகாங்கிதம் அடைந்துகொண்டிருக்கிறது. சாதனையின் உச்சத்திலே இன்று நாம் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால் இவைகளனைத்தையும் மனிதகுல மேம்பாட்டுக்காக நாம் பிரயோகிக்கிறோமா என்பதுதான் சிந்தனைக்குரிய விடயமாகும்.

நவீனத் தொழில்நுட்பம் எமக்கீந்த மிக உன்னதமான கண்டுபிடிப்புக்களே இணையமும் அதனூடான சமூக வலைத் தளங்களும். ஆனால் அவை இன்று எவ்வாறு எமது சமூகத்தால் கையாளப்படுகின்றன என்று நோக்கின், அழகான ஆக்கச் சிந்தனையென்ற வாகனத்திலேறி ஒரு அழிவுப் பாதையினூடாகப் பயணித்துக்கொண்டிருப்பதனை உணரமுடியும்.

குறிப்பாக பேஸ்புக் எனும் சமூக வலைத்தளம் தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்துகொள்வதற்கும், நண்பர்களுடனான தொடர்புகளுக்கும், தூரதேசத்து விடயங்களாக விருந்தாலும் உடனடியாக அவற்றைத் தெரிந்துகொள்வதற்கும், ஏராளமான விடயங்களைக் கற்றுக்கொள்வதற்குமான அதீத ஏற்பாடுகளுடன் கூடிய மிகச் சிறந்த கண்டுபிடிப்பாகும். ஆனால் இன்று இத்தனை சாதகமான விடயங்களும் பல்வேறு பாதகங்களுக்காகப் பயன்படுத்தப் படுவதே வேதனைக்குரிய விடயமாகும்.

தற்போதெல்லாம் இந்த பேஸ்புக் எனும் விடயம் அடுத்தவரை அவதூறு சொல்லுதல், அடுத்தவரின் குறைகளை அம்பலப்படுத்தி உலகறியச் செய்தல், ஒருத்தரின் அந்தரங்கங்களை ஏதோவொரு வகையில் சேகரித்து அதை பேஸ்புக்கில் பதிவேற்றுவதாகப் பயமுறுத்தி அச்சுறுத்தல், பணம் பறித்தல் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரல், தங்களுக்குத் தெரிந்த கெட்டவார்த்தைகளையெல்லாம் கொமன்ட் என்ற பேரில் பதிவிட்டு மன ஆறுதலடைதல், தாம் குற்றம் செய்வதோடு மாத்திரமன்றி செயார் செய்வதன் மூலம் அடுத்தவரையும் குற்றமிழைக்கத் தூண்டலும் வழிகாட்டலும் என விரிந்து செல்கின்றன இதன் சாதனைகள்.

அதுமாத்திரமன்றி இன்று இந்த பேஸ்புக் எனும் விடயம் பொழுதைக் கழிப்பதற்கு மிகச் சிறந்த சாதனமாக விளங்குகிறது. முக்கியத்துவம் வாய்ந்த ஆயிரம் கடமைகளிருக்க அவற்றைப் புறந்தள்ளி உட்கார்ந்த இடத்திலிருந்தே இன்றைய இளைஞர் சமூகம் பேஸ்புக்கில் பொழுதைக் களிக்கிறது. இதனால் உடலியல் ரீதியாகவும் அவர் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதனை யாரும் சிந்திப்பதாய்த் தெரியவில்லை.

வணக்கஸ்தளங்கள் மற்றும் கல்வித் தளங்கள் ஆகிய இடங்களில் கூட பேஸ்புக் பார்த்தவாறே பலரின் காலம் கழிகிறது. இதனால் அவர்கள் தமக்குத் தேவையான எத்தனையோ விடயங்களைப் புறந்தள்ளிவிடுமளவிற்கு இதற்கு அடிமைப்பட்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.


மனிதன் இயல்பிலேயே தவறுகளுக்கு மத்தியில்தான் படைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் அவன் தன்னை அவைகளின்பால் செலுத்தாமல் மனத்தைப் பக்குவப்படுத்துவதே வாழ்வின் சவால்களை வெற்றிகொள்வதாகும். ஆனால் இங்கு இந்த பேஸ்புக் கலாசாரமானது தவறுகளின்பால் ஒருத்தனை ஊக்கப்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் கொண்டு காணப்படுகிறது.

எனவே இத்தகைய விடயங்கள் குறித்து பராமுகமாக இருக்காமல் நாட்டின் சாதாரண பிரஜை தொடங்கி அரசாங்கம் வரை சிந்திக்க வேண்டும். சமூகத்தை நன்னெறிப் படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனின் தவறுகள் ஒரு தேசத்தின் தவறு. ஒவ்வொரு தனிமனிதனின் எழுச்சி ஒரு தேசத்தின் எழுச்சி . ||



**எம்.எம்.பஸ்மிலா**

*A Student who following B.A Degree programe @ Raapa International Campus*




**RAAPA INTERNATIONAL CAMPUS**

*A Journey towards better humanity*

# දිරිය කතුන් හට දිරිදෙන

# ඒ.ආර්.එම් විදේශ රැකියා




විදේශ රැකියා ක්ෂේත්‍රයේ විශ්වාසය රැකවරණය වගකීම අතින් මහත් ආන්දොලනයක් ඇති කල ඒ .ආර්. එම් විදේශ රැකියා ආයතනයෙන් විදේශ ගත වූ දහස් ගණනකගේ ආශිර්වාදයෙන් 2012 විශිෂ්ට සම්මානයෙන් පිදුම් ලබයි. එදත් අදත් හෙටත් ඔබ අප කෙරෙහි තබන විශ්වාසය ඒ.ආර්.එම් විදේශ රැකියා ආයතනය ඉතා අගය කොට සලකන අතර හෙට දිනයේ ඔබේ අනාගතය ඔබ සිතන ආකාරයෙන් සාර්ථක වේවායි! අපේ එකම පැතුමයි.

## ඒ ආර් එම් විදේශ රැකියා ආයතනය

114/1A, මාර්කට් පෙදෙස, අනුරාධපුර.

ටෙලි : 025-2237888/025-2237889 ජ. දු : 077-3041689/0716171012


A/L இன் பின்னர்
சவால்களை வெல்லும்
சர்வதேசக் கல்வித் தகைமைகள்
edexcel
PEARSON
UNIVERSITY OF WOLVERHAMPTON
KNOWLEDGE • INNOVATION • ENTERPRISE
London South Bank University
UK Degrees in...
Computing
Law
Civil Engineering
Electrical and Electronic Engineering
Telecom Engineering
Quantity Surveying
Management
Biomedical Science
Biotechnology
BCAS CAMPUS
UNIVERSITY GRANTS COMMISSION
UGC
RECOGNISED
HOTLINE : 076 520 4503
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
BCAS City Campus - 256, Galle Road, Colombo 06. 0112 364458
BCAS Mt. Lavinia Campus: 54, Galle Road, Mt. Lavinia. 0112 728082
BCAS Wayamba Campus - 103/2, Dambulla Road, Kurunegala. 0372221144, 0773534707
BCAS Kandy Campus - 344, Peradeniya Road, Kandy. 0812224731
BCAS Batticaloa Campus - 294,1/4, Trinco Road, Batticaloa. 0652228451
BCAS Kalmunai Campus - No.392/1, Main Street, Kalmunai. 0672226899
BCAS Jaffna Campus: 16, Point Pedro Road, Jaffna. 0212 219 910, 0777 102131